Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY — தேசிய தினசரி

போன்: 389 — தபாற பெட்டி எண் 49

மலர் 3 — யாழ்ப்பாணம், பிலவ மார்கழி 28 ஆம் நாள் ஷஃபான் 5 — (12-1-62) — வெள்ளிக்கிழமை — இதழ் 284




# உதவி மேயர் தெரிவில்

## திடீர் திருப்பம்

### திரு. துரைராஜசிங்கம் ஏகமனதாகத் தேர்வு

### ஒருவருடத்திலேயே ஒப்பந்தம் முறிந்தது

### ஆசிரியர் பதவியை அழகையா கைவிட்டார்

யாழ்ப்பாணம், வெள்ளி

**யாழ்ப்பாண நகரின் புதிய உதவி மேயராக சுருட்டுத் தொழிலாளர் தலைவரும் லங்கா சமசமாஜக் கட்சி அங்கத்தவருமான திரு. ஆ. துரைராஜசிங்கம் நேற்று ஏகமனதாகத் தெரிவு செய்யப் பெற்றார்.**

மாநகரசபையின் பெரும்பான்மை அங்கத்தவர்கள் சென்ற வருடம் செய்து கொண்ட ஒப்பந்தப்படி இவ்வருடம் உதவிமேயர் பதவிக்குப் போட்டியிடவிருந்த திரு. ஏ. நடராசாதான் திரு. துரைராஜசிங்கத்தின் பெயரைப் பிரேரித்தது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் முடிந்து சபையிலிருந்து வெளியேவந்த புதிய உதவிமேயர் திரு துரைராஜசிங்கத்தை யாழ்ப்பாணம் எம். பி.யும் முன்னாள் நகரமேயருமான திரு. அல்பிரட் துரையப்பா மாலை சூட்டி வரவேற்றார்.

மாநகரசபை கமிஷனர் திரு டி. டி. ஜயசிங்காவின் தலைமையில் நேற்று மாலை மாநகர சபையின் விசேஷக்கூட்டம் நடைபெற்றது.

புதிய உதவிமேயர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக இக்கூட்டம் நடைபெற்றது.

உதவி மேயர் பதவிக்கு திரு. ஆ. துரைராஜசிங்கத்தின் பெயரை திரு. ஏ. நடராசா பிரேரித்தார். திரு. கே. எஸ். நடராசா ஆமோதித்தார். வேறு எவருடைய பெயரும் பிரேரிக்கப்படாததால் திரு. துரைராஜசிங்கம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டதாக கமிஷனர் அறிவித்தார்.

**மேயரின் பாராட்டு**

உதவிமேயர் தெரிவு முடிவடைந்ததும் நகரமேயர் திரு. டி. எஸ். துரைராஜா புதிய உதவிமேயரைப் பாராட்டிப் பேசுகையில் திரு. துரைராஜசிங்கத்தின் நேர்மைக்கும் பாரபட்சமற்ற தன்மைக்கும் எடுத்த காரியத்தைக் கூச்சமின்றி முடித்து வைக்கும் மனப்பான்மைக்கும் நற்சான்றாகவே உதவிமேயராக அவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளாரென்று கூறினார்.

(8-ம் பக்கம் பார்க்க)

# அரசாங்கம் ஒன்றா? இரண்டா?

## பார்லிமெண்டில் திரு. பிலிப் கேள்வி

கொழும்பு, வியாழன்

"சபை முதல்வர் சமரசம் பற்றிப் பேசுகிறார். பிரதமரும் அவரது பார்லிமெண்டரிக் காரியதரிசியும் நிதிமந்திரியும் வேறு விதமாக நடந்துகொள்கின்றனர். அரசாங்கம் ஒன்றா இரண்டா என்று இப்பொழுது சந்தேகம் தோன்றியுள்ளது. கவர்னர்ஜெனரல் சில உத்தரவுகளைப் பிறப்பித்திருப்பதாகவும் அவற்றை அமுல் நடத்துவதற்கு நிதிமந்திரி தயார் செய்துவருவதாகவும் கேள்விப்படுகிறோம். இது உண்மையா?"

இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன இன்று மாலை பார்லிமெண்டில் சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீது பேசுகையில் குறிப்பிட்

(4-ம் பக்கம் பார்க்க)

கிராம சபை திருத்த மசோதா

# நல்லூர் எம்.பி.யின் திருத்த பிரேரணை நிராகரிப்பு

## எதிர்க்கட்சியினர் ஆதரவு

கொழும்பு, வியாழன்

கிராமசபைகள் திருத்த மசோதாவுக்கு நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் கொண்டுவந்த திருத்தப் பிரேரணையை எதிர்க்கட்சியினர் பலமாக ஆதரித்த போதிலும் அது நிராகரிக்கப்பட்டது.

பார்லிமெண்ட் இன்று மீண்டும் கூடியபொழுது கேள்வி நேரத்தின்பின சபை கமிட்டி நிலையில் கிராமசபைகள் திருத்த மசோதாவை ஷரத்து வாரியாகப் பரிசீலனை செய்தது.

கிராமசபையொன்றை மாநகரசபை அல்லது நகரசபை, அல்லது பட்டினசபையின் அந்தஸ்துக்கு உயர்த்துவதென்று ஸ்தலஸ்தாபன மந்திரி கருதினால் கிராமசபையொன்றைக் கலைத்துவிடுவதற்கு மந்திரிக்கு அதிகாரமளிப்பதுதான் இத்திருத்த மசோதாவின் நோககம்

கிராமசபையொன்றை மந்திரி கலைப்பதற்கு முன்னர் கிராமசபையைக் கலைப்பதை அவர்கள் அங்கீகரிக்கிறார்களா? இல்லையாவென்பதை கிராமசபை அங்கத்தவர்களின் கருத்தை மந்திரி அறிந்து கொள்ள வேண்டுமென்று கூறும் திருத்தப்பிரேரணையொன்றை நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் கொண்டுவந்தார்.

இத்திருத்தப் பிரேரணையை ஆதரித்து டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில் கிராமசபையின் அந்தஸ்தை உயர்த்துவதற்காக சபையைக் கலைப்பதற்கு முன்னர் அப்பகுதி மக்களின் கருத்தை அறிந்து கொள்வது விரும்பத்தக்கதென்றும் இல்லையேல் சபையைக் கலைப்பதை எதிர்த்து ஆட்சேபக் கூட்டங்கள்

(8ம் பக்கம் பார்க்க)

# ஈழநாடு

## வாரப் பதிப்பு

பொங்கல் புதுநாளில் வெளியாகும் ஈழநாடு வார இதழில்:

★ பரம்பரை கே. டானியல் எழுதியுள்ள சிறுகதை.

★ ஈழத்தமிழர் வரலாறு, ஈழநாட்டின் வரலாறு ஆதாரபூர்வமான முறையில் எழுதப்பட வேண்டியதன் அவசியத்தை திரு. குல. சபாநாதன் தமது கட்டுரையில் எடுத்துக் காட்டுகின்றார்.

★ **கவிதைப் பொங்கல்** கவிஞர்கள் பலரின் இனிய படைப்புகள்.

★ **உலக மேடை** சர்வதேச அரங்கில் இவ்வாரம் நடைபெற்ற முக்கிய சம்பவங்கள் பற்றி டி. எம். எம். தரும் விமர்சனம்.

★ **கலை அரங்கம்** திரை உலகச் செய்திகள்.

★ **இந்தியப் பிரயாணம் பற்றிய சிறப்புக் கட்டுரைகளும் படங்களும் இந்த இதழில் இடம் பெறுகின்றன.**

தென்னிந்தியாவிலுள்ள பல யாத்திரை ஸ்தலங்களுக்கு இக்கட்டுரைகள் வாசகர்களை அழைத்துச் செல்கின்றன.

இன்னும் பல சுவையான அம்சங்கள்

தனிப் பிரதி —————— சதம் 15

கிரிக்கட்

# இந்தியா - 428

## நட்கர்னியின் சிறந்த ஆட்டம்

சென்னை, ஜன. 11

இங்கிலாந்துக் கோஷ்டிக்கும் இந்தியக் கோஷ்டிக்கும் சென்னை கார்ப்பரேஷன் மைதானத்தில் நடைபெற்று வரும் ஐந்தாவது டெஸ்ட் கிரிக்கட் போட்டியில் இரண்டாவது நாளான இன்று இந்தியக்கோஷ்டி தனது முதலாவது இன்னிங்சில் 428 ரன்கள் எடுத்து தனது ஆட்டத்தை முடித்துக்கொண்டது. இன்றைய ஆட்டத்தில் நட்கர்னியும் என்ஜினியரும் சிறப்பாக விளையாடினர்.

பின்னர் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்துக் கோஷ்டி இன்றைய ஆட்டநேரம் முடியும் வரை நான்கு விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 108 ரன்கள் எடுத்தது.

# இலங்கையில் கதிரியக்க அபாயம் நீக்க நடவடிக்கை எடுக்குமாறு

## திரு. ஜெயவிக்கிரமா கோரிக்கை

கொழும்பு, வியாழன்

'கதிரியக்கத்தினால் ஏற்படக்கூடிய அபாயம் பற்றி இந்திய வானொலி இந்திய மக்களை எச்சரிக்கை செய்து வரும்போது இலங்கை மக்களுக்கு எதுவித எச்சரிக்கையும் இங்கு விடுவிக்கப்படவில்லை' என்ற விபரம் பார்லிமெண்டில் கேள்விநேரத்தின் போது வெளிவந்தது.

'கதிரியக்கத் துகள்கள் இலங்கையில் விழுகின்றனவா என்பதை பரிசோதனை செய்வதற்கு இங்கு போதிய கருவிகள் உள்ளதா? அப்படியானால் ஏதும் பரிசோதனை இதுவரை நடத்தப்பட்டதா? இல்லாவிடில் பரிசோதனைக்குத் தேவையான கருவிகளை கல்வி உதவி மந்திரி வாங்குவாரா?' என. திரு மாண்டேகு ஜெயவிக்கிரமா உதவி மந்திரியைக் கேட்டார்.

கல்வி உதவி மந்திரி பதிலளிக்கையில் கூறியதாவது:

இலங்கை பல்கலைக் கழகத்திலுள்ள வானொலி ஐஸதோப் ஆய்வுக் கூடத்தில் மழையிலும் தண்ணீரிலும் உணவிலும் கதிரியக்கம் பரவியுள்ளதா என்பது பற்றி பரிசோதனை நடத்துவதற்கு தேவையான கருவிகள் உள்ளன. மழைத் தண்ணீர் சேகரிக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

இது சம்பந்தமாக துரிதமான பரிசோதனை நடத்துவ

(8ம் பக்கம் பார்க்க)

# அகில இலங்கை தமிழ் மறைத் தேர்வு

கொழும்பு, வியாழன்

சென்ற ஆண்டிலே தமிழ் மறைக்கழகம் நடத்திய தமிழ் மறைத் தேர்விலே பரிசில் பெறுவோர் விபரங்களைக் கீழே காண்க. முதற் பரிசிலுக்குத் தங்கப்பதக்கமும் ஏனையவற்றுக்கு வெள்ளிப் பதக்கங்களும் தமிழ்மறைக் கழகத்தின் பத்தாவது திருக்குறள் மகாநாட்டில் 20-5-62ல் வழங்கப்படும். பரிசுபெற்றோர் விபரம்:-

மேற்பிரிவு

முதலாம்பரிசில்; திரு. மா. இசக்கி, மாத்தளை. இரண்டாம் பரிசில்: திரு. ஆ. தாமோதரம் பிள்ளை, யாழ்ப்பாணம். மூன்றும்பரிசில்: திரு. ஆ. தருமலிங்கம் கொழும்பு.

மத்திய பிரிவு

முதலாம்பரிசில்: பொ. பொன்னம்மா முள்ளியவளை. இரண்டாம்பரிசில்: நா பாலசுப்பிரமணிய ஐயர் முள்ளியவளை. மூன்றும்பரிசில்: இ. புட்பராணி சுழிபுரம். நான்காம் பரிசில்: பொ. சரோசினிதேவி நீர்வேலி.

கீழ்ப்பிரிவு

முதலாம்பரிசில்: ந. சிறீஸ்கந்தரரசா காரைநகர். இரண்டாம்பரிசில்: சு கமலநாயகி யாழ்ப்பாணம். மூன்றும் பரிசில்: சு. ரங்கநாயகி யாழ்ப்பாணம். நாலாம்பரிசில்: சு. இலட்சுமி பன்வில.

தொடக்கப்பிரிவு

முதலாம்பரிசில்: ஆ. கௌரிதேவி சாவகச்சேரி. இரண்டாம்பரிசில்: சி. ஞானசம்பந்தன் காரைநகர். மூன்றும் பரிசில்: த. நளினு கீரிமலை. நாலாம் பரிசில்: த. ஸ்கந்தராசா, கீரிமலை.

மிகக்குறைந்த வயதினருக்குரிய பரிசில்:

க. பவானி தெல்லிப்பழை, பிறந்த தேதி 3-5-53.

மேற்படி தேர்வுக்குத் தோற்றிச் சான்றிதழ் பெறுவோர் பின்வருமாறு:-

பெயர்களுக்குப் பின்னுள்ள இடங்கள் தேர்வு நடைபெற்ற மத்திகளாகும். ஒவ்வொரு பிரிவிலும் முதலாம் வகுப்பிலே தேறினவர்களுடைய பெயருக்குப் பின் (மு) இடப்பட்டுள்ளது.

மேற்பிரிவு

த. மாலோசமணி நெல்லியடி; கு. கோகிலாம்பாள் சுளிபுரம்.

மத்தியபிரிவு

சி. மங்கையர்க்கரசி அளவெட்டி; த. சச்சிதானந்தம்(மு) கல்முனை; கு. லீலாவதி, இ. சற்குணராசா, சுளிபுரம்; வி. அரியமலர், த. அருந்தவச்செல்வி, சி புவனேசுவரி சண்டிருப்பாய்; வீ இராசம்மா சாவகச்சேரி; க. குணராசா, ந. சிவபாலகணேசன், நா. பரமேஸ்வரி, க. பரமேஸ்வரி தெல்லிப்பழை; சு. சுரசுவதி (மு) முள்ளியவளை.

கீழ்ப்பிரிவு

சி. சிவானந்தராசா அளவெட்டி; சி. சுமலாம்பாள், மு பார்த்தும்மாபீபீ(மு), ம. வேலுசாமி கண்டி; அ. மங்கையர்க்கரசி(மு), சி. சிவஞானசுந்தரி (மு), சி. சிவகாமசுந்தரி(மு), ச. சிவகுமாரன் காரைநகர்; இ வள்ளிப்பிள்ளை, க. இராசபூபதி(மு), சி. சுசிலாதேவி (மு), கா. புஷ்பராணி (மு), வா. சரோஜினிதேவி, கீரிமலை; சி. சரஸ்வதி (மு) கொழும்பு; செ. இரகுராமன் சுளிபுரம்; நா. சபாரத்தினம், க. தங்கராசா, க. தனலட்சுமி சண்டிருப்பாய்; சி. சிவகுமாரி, செ. விசயலட்சுமி சாவகச்சேரி; வை கணபதி, வை. கந்தசாமி, செ. இராணி, வை. சாவித்திரி (மு). மா. செல்லக்குமாரி, இ. சானகி, இ. பரமேஸ்வரி (மு) நாவலப்பிட்டி; சு. இராசேஸ்வரன் (மு), வே. நாகேஸ்வரி, த. ஜெகதாம்பாள் (மு), சு. ஸ்ரீதரசர்மா, ப. நித்தியானந்தசர்மா (மு) நீர்வேலி; மு. இராமசாமி (மு), பொ. சுப்பிரமணியம் (மு), செ. இராசேந்திரன் (மு), சா. பக்கீர்முகம்மது, சு. முந்தாஸ் மக்கீன் (மு), த. ஜெகந்நாதன் (மு), இ. அழகர்சாமி(மு), த. சிவஞானராசன் (மு), சு. சந்திரசேகரம், ச. சிவநாதன்(மு), ப. கணேசன் (மு), சி. சுப்பையா, து. விக்கினராசா, ப. சின்னம்மா(மு), புசும்சுநிசா(மு), பெ. அமிர்தம் (மு), ஜோர். ஓலன்பேபி (மு), க. கிருஷ்ணகுமாரி (மு). வா. றெகினுநிசா(மு), சு. புஷ்பரதி (மு), சு. சரஸ்வதி(மு) அ. ஐகைருண்நிரா(மு), வா. நபீசாபீபீ (மு). ஜ. பௌசிலினுயா (மு), சி. கனகாம்புஜம், சு. தமயந்தி(மு), பெ. சதாமிர்தம், சி. செல்வராரா(மு), செ. சரோஜா(மு) பன்வில; தா. பாலகங்காதரன்(மு), தா. நீலாம்பிகை (மு) நெல்லியடி; பொ. மாணிக்கராசா(மு), சு. பழனிச்சாமி, கோ. ஜெகதீசன், கு. கணேசன்(மு), ம. இரத்தினசபாபதி (மு), மு. நிர்மலா, த. தேவசேன, கு. ஜெயந்தி யாழ்ப்பாணம்; கா. தவபாலச்சந்திரன், கு. சவுந்தரலிங்கம், இ. விசாகலிங்கம், க. பரமேசுவரி(மு), ந. மகேசுவரி, க. சிவசந்திராதேவி(மு), சி. புனிதபூபதி, க. சரசுவதி, சு. யோகேசுவரி முள்ளியவளை.

தொடக்கப்பிரிவு

வி. சுந்தரமூர்த்தி, சி. சிவஞானராசா, அளவெட்டி; சு. சிவமணி (மு), காரைநகர்; த. வேல்ராசா (மு), த. நளினு (மு), சி. திலகவதியம்மா (மு), சோ. வடிவாம்பிகாதேவி (மு), கீரிமலை; சி. சுதந்திரன், ந. சிவானந்தன் (மு), சி. சாந்தா (மு), சு. மனோகரி, ச வள்ளிமணாளன் (மு), ச. சிறீகாந்தா, கு. அச்சுதன் (மு), கொழும்பு; வி. சிறீகாந்தன், சண்டிருப்பாய்; செ. செந்தில்மணி (மு), சோ. சாரதாதேவி (மு), த. சந்திராதேவி (மு), வை. சுந்தராம்பாள், நா. சியாமளா, பெ. சரோஜினி (மு), சாவகச்சேரி; க. பவானி (மு), ச. சோமசுந்தரம், செ. ரவீந்திரன், தெல்லிப்பழை; ப. சௌதாமினி (மு), த. வெண்மகலதேவி, செ செல்வராணி (மு), ச. கமலாதேவி (மு), நீர்வேலி; சுடிவேல்லைச்சாமி, சு. முருகையா, மு. சண்முகவேல், நா. சுப்பையா, கா. ச. முகைதீன் அலி, அ. சபுநிசா, பன்வில: தா. கனகாம்பிகை (மு), து. ஸ்ரீகாந்தி ரங்கநாதன், செ. ஜெகதாதேவி, நெல்லியடி; வ. கெங்காதேவி, யாழ்ப்பாணம்: தா. அழகரத்தினம், மு. குலசிங்கம் க. செல்வராசா, அ. மரியதாசு (மு), செ சிவராசா (மு), ச. செல்லத்தம்பி, ச. கந்தசாமி (மு), வி. தெய்வேந்திரன், பொ. கந்தசாமி, செ. பொன்னம்பலம், (மு), க. சுசீலாதேவி (மு), ச. புஷ்பமலர் (மு), க. இரேவதி, க. தேவமலர் (மு), அ. தனலெட்சுமி, (மு), க. பூமலெட்சுமி, (மு), சு நவமணி, வி. கமலராணி, செ. சரசுவதி, ச. நாகேஸ்வரி, முள்ளியவளை.


## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணுநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

22 ஸ்ரீ 5000 தொடர்பிலக்கமுள்ள டீசல் லொறியும் EN 4500 தொடர்பிலக்கமுள்ள 'கொன்சல்' காரும் விற்பனைக்கு உண்டு. கணேசன் மோட்டார் அன்ட் எலக்றிக்கல்ஸ், 5, மணிக்கூடு வீதி, யாழ்ப்பாணம். பார்வையிடும் நேரம்: காலை 8 மணி தொடக்கம் 10 மணி வரை. சனி, ஞாயிறு, திங்கள்.

## தேவை

காரியாலயத்தில் பியூனுக வேலை பார்ப்பதற்கு 18 வயதுக்குட்பட்ட பையன் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் காலை 10 மணிக்கும் மாலை 4 மணிக்கும் இடையில் 16-1-62க்கு முன் நேரில் வரவும். 11E, மொம்சாக் மாளிகை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் சேவை செய்யும் கே. கார்த்திகேசு என்பவரின் தந்தையாகிய கதிர்காமு என்பவர் சென்ற 10-1-62ல் காலமானர், அன்னரின் பூதவுடல் செம்மணி மைதானத்தில் 11-1-62 பிற்பகல் 2 மணியளவில் தகனஞ் செய்யப்பட்டது. பி. தேவராஜா, யா. ஆ. சி. சே. சங்கம், மரண சகாயநிதி காரியதரிசி.

தமிழகமும் பொதுத்தேர்தலும்

# தேர்தல் களத்தில் கட்சிகள், கொள்கைகள், திட்டங்கள்

## ஸ்ரீமதி இந்திராவின் தமிழ்நாடு விஜயம்

உலகிலேயே மிகப் பெரிதான இந்திய பொதுத் தேர்தலில் சகல கட்சிகளும் தங்கள் திட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றை மக்களிடம் அக்குவேறு ஆணிவேருகப் பிரித்து சிறிய விஷயத்தையும் ஆராய்ச்சி நுணுக்கத்துடன் பிரசாரம் செய்துவருகின்றன. மக்கள் கண்ணேட்டத்தில் இவை படும் பாட்டின் இறுதி முடிவுகள் தேர்தல் நெருங்க நெருங்க வெளிச்சமாகிக்கொண்டு வருகின்றன.

### சுதந்திரா கட்சி

ராஜாஜியின் சுதந்திரக் கட்சி, "குடியானவர்களே! நிலத்துக்கு கிஸ்திக் கட்டணத்தை ஒழித்துவிட வந்திருக்கிறது சுதந்திரா கட்சி. அந்த கட்சியை ஆதரியுங்கள்!" எனக் கூறுகின்றது.

### தி. மு. க.

கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும், தமிழும் உன்னுதிரத் துதித்தெழுந்த திராவிடநாட்டுக் கோரிக்கையை, திராவிட முன்னேற்றக்கழகம் மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளது. காலப்போக்குக்கு அமைய பிராமணர்—பிராமணர் அல்லாதார் போராட்டம் அதன் வலுப்பிடியிலிருந்து நழுவிவிட்டதென்றே கூறலாம். ஆனல் தி. மு. க அணியில் கன்னடரும், தெலுங்கரும், மலையாளத்தவரும் ஒன்று சேருவார்களென்பதற்கு எவ்வித அறிகுறியும் இல்லை. இதனலேற்பட்ட கருத்துவேற்றுமையாலேயே தி. மு. க.விலிருந்து தமிழ் தேசியக் கட்சி உருவானது என்பது சகலரும் அறிந்ததே!

ஆனல் தி. மு. க. வின் செல்வாக்கு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் குறைந்தது என்று சொல்வதற்கில்லை. இந்நிலைக்கு சென்னையிலும் மற்றும் தமிழ்நாட்டிலுமுள்ள நகராட்சி மன்றங்கள் பலவற்றில் அதன்கொடி பறந்துகொண்டிருப்பதை எடுத்துக்காட்டலாம். தமிழ்நாட்டில் தொழிலாளர்களிடையே இதற்குச் செல்வாக்கிருப்பதை மறைக்கமுடியாது. இந்நிலை நிரந்தரமாக இருக்குமா என்பதைப்பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

### தமிழ்த்தேசியக் கட்சி

தனிஆட்சித் தமிழகமொன்றை உருவாக்குவதே இதன் லட்சியம். தேர்தல்களத்தில் குதித்திருக்கும் மிகச் சிறுபிராயமுடைய இக் குழந்தை இப்பொதுத் தேர்தலில் பெரும் சாதனைகளை நிலைநாட்டுமென்பதற்கில்லை. ஆனல் தி. மு க. வின் செல்வாக்கைப் பாதிக்கவும், காங்கிரஸின் செல்வாக்கை அதிகரிக்கவும் இக் கட்சியைப் பெரியார் பயன்படுத்துவாரென்பது அண்மையில் நடைபெற்ற வாக்காளர் மகாநாட்டின்போது பகிரங்கமாகிவிட்டது.

### கம்யூனிஸ்ட் கட்சி

இந்திய எல்லைத்தகராறில் சீன ஆக்கிரமிப்புப்பற்றி கம்யூனிஸ்ட் கட்சி மௌனம் சாதிப்பது இப்பொதுத் தேர்தலின் போது இக் கட்சிக்கு எதிராகத் தொடுக்கப்படும் பாணமாக இருக்கிறது.

### ஏனைய கட்சிகள்

பிரஜா சோஷலிஸ்ட், பாரதீய ஜனசங்கம், சோஷலிஸ்ட், சோஷலிஸ்ட் தொழிலாளர் கட்சி, தமிழரசுக் கழகம், நாம் தமிழர் கட்சி, முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் மக்களிடையே வலுவுற்றிருப்பதாகச் சொல்வதிலும், இவற்றிலிருந்து செல்வாக்குடைய சிலர் தெரிவு செய்யப்பட வாய்ப்பேற்பட்டால் அது எதிர்பார்த்ததொன்ருகவே இருக்கும்.

### காங்கிரஸ் கட்சி

'திருவாளர் தேசியம்பிள்ளை' என்று மற்றவர் சிலரால் வருணிக்கப்படும் காங்கிரசின் திட்டங்கள் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மூலம் தேர்தல் களத்துக்கு வந்திருக்கிறது.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தையும் தேசிய நலனையும் முன்வைத்தே காங்கிரஸ் பிரசாரம் செய்கிறது. இந்தியா முழுதிலும பரவலாக ஆட்சியில் இருக்கும் காங்கிரசை காமராஜர் தலைமையிலுள்ள தமிழ் நாட்டிலிருந்து விரட்டுவது அசாத்தியமானதொன்ருகும். சுதந்திரா, தி.மு.க ஆகியவற்றை எதிர்க்கும் அத்தனை கட்சிகளும் காங்கிரசின் கை ஓங்கவே வழிசெய்கின்றன!

### ஸ்ரீமதி இந்திரா

பிரதமர் நேரு தமிழ் நாட்டுக்கு இப்பொதுத் தேர்தலின் போது விஜயம் செய்ய மாட்டாரென்பது தெரிந்ததே! ஆனல் இந்திய தேசிய காங்கி

(5ம் பக்கம் பார்க்க)

உ

## திருமண அழைப்பு

மணமகன்: செல்வன் வி. சிவசுப்பிரமணியம் (நவபாலசுப்பிரமணியம்) ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி. திரு. அ. விஜயரத்தினம் இளைப்பாறிய பொலிஸ் அலுவலகப் பிரதம லிகிதா அவர்களின் ஏக புத்திரன்.

மணமகள்: செல்வி க. சரோஜினிதேவி திரு. மு. கணபதிப்பிள்ளை (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ் வித்தியாசாலை ஆசிரியர், யாழ்ப்பாணம் ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலைச் செந்தக்காரர்) அவர்களின் சிரேஷ்ட புத்திரி.

நிகழும் பிலவ ஆண்டு தைத் திங்கள் நான்காம் நாள் (17-1-62) புதன்கிழமை பகல் 10-30 மணியளவில் வரும் மங்கள நற்காலத்தில் திருமணம் மணமகளில்லத்தில் நடைபெறும். நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் வந்து மணமக்களை வாழ்த்துமாறு வேண்டுகிறேம். அன்று மாலை 5 மணிக்கு மணமகனில்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேம்.

அ. விஜயரத்தினம்
17/2, ஐயனர் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

மு. கணபதிப்பிள்ளையும் பாரியாரும்
17/1, ஐயனர் கோவிலடி,
யாழ்ப்பாணம்.


## குனேகா செண்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற

குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்:

குனேகா அடையார், மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:

ஜெகஜோதி அன் கோ,

குருநெனியா.

கொழும்பு ஸ்டாக்கிஸ்ட்:

செல்வாஸ் (SELVAS)

(பிரபல ஜவுளித் திளிசு விற்பனையாளர்கள்)

31, செட்டியார் தெரு, கொழும்பு.

யாழ்ப்பாண விற்பனையாளர்

தமிழ்ப் பண்ணை, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# 'இவ்வாண்டுக்குள் மே. இரியன் எங்களுடன் இணைந்துவிடும்'

## ஜனதிபதி சுகர்னே அறிவிப்பு

ஜாகர்த்தா, ஜன. 11

**மேற்கு இரியன் விடுதலை சம்பந்தமாக ஜனதிபதி சுகர்னே மூன்று நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்.**

மேற்கு இரியன் தற்காலிக அரசாங்கக் காரியாலயங்களை அவர் தெற்கு செலிபிஸில் அமைத்திருக்கிறார். 6 விமானப்படைப் பிரிவுகள் நிறுவப்பட்டிருக்கின்றன.

அரசாங்க உயர் அதிகாரிகளுக்கு ராணுவப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஜனதிபதி சுகர்னே இங்கு பேசுகையில் இவ்வாண்டு இறுதிக்குள் மேற்கு இரியன், இந்தோனேஷியாவுடன் சேர்ந்துவிடுவது உறுதி எனக் கூறினார். மேற்கு இரியன் சம்பந்தமாக ஐ. நா. வில் முன்பு இந்தியா கொண்டுவந்த தீர்மானத்தை மேற்கு நாடுகள் எதிர்த்ததே இப்போதைய நெருக்கடிக்குக் காரணம் என ஐ.நா.விலுள்ள இந்தோனேஷியப் பிரதிநிதி கூறினார்.

## லாவோஸ்

ஜெனிவா, ஜன. 11

லாவோஸில் தேசிய ஒற்றுமை அரசாங்கம் ஒன்றை அமைப்பதில் ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமைகளைத் தீர்க்கும்பொருட்டுத் தாம் ஜெனிவா மகாநாட்டுக்குச் செல்லத் தயாராக இருப்பதாக வலதுசாரிப் பிரதமர் பூன்னும் கூறியிருக்கிறார். ஜெனிவா மகாநாட்டின் கூட்டுத் தலைமை நாடுகளான பிரிட்டனும் ரஷ்யாவும் இளவரசர்களைச் சந்தித்துப் பேசுமாறு அழைப்பு விடுத்துள்ளன.

# கூலிப்படைகள் இன்னும் இருந்துவருகின்றன

## கடாங்கா நிலைமைபற்றி ஐ. நா. பிரதிநிதி அறிக்கை

நியுயோர்க், ஜன. 11

கடாங்காவில் அந்நியக் கூலிப் படைகள் இன்னும் இருந்து வருவதாயும், அதனால்தான் ஐ. நா. நடவடிக்கையில் இழுபறி ஏற்பட்டுவருகிறதென்றும் எலிஸபெத்வில்லியிலுள்ள ஐ. நா. பிரதிநிதி, தலைமைக் காரியதரிசிக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

கூலிப் படைக்கு ஆள் திரட்டுவது இன்னும் இருந்து வருகிறது. ஆயுதங்களும் அந்நிய ஆட்களும் இன்னும் வந்து கொண்டிருக்கின்றனர்" என்றும் அவரது அறிக்கை கூறுகிறது.

அடௌலா-ஷோம்பே உடன்படிக்கை ஏற்பட்டது முதல் இதுவரை விளைந்துள்ள சம்பவங்கள் பற்றி அவரது அறிக்கை விவரிக்கிறது. பிரெஞ்சுக் கூலிப் படைகள் அங்கு வந்திருப்பதாயும் கூறப்பட்டுள்ளது. இதற்கிடையில் லியப்போல்ட்வில்லி திரும்புமாறு விடுக்கப்பட்ட அழைப்பை காங்கோ உதவிப் பிரதமர் திரு. கிஸங்கா நிராகரித்துவிட்டதாய ஒரு செய்தி கூறுகிறது. தான் ஸ்டான்லிவில்லியிலேயே இருக்க விரும்புவதாய் அவா தெரிவித்திருக்கிறாராம். "காங்கோவுடன் கடங்கா இணைப்பு முடிந்தால்தான் லியபோல்ட் வில்லி திரும்புவேன்" என்றும் அவர் கூறியுள்ளதாய்த் தெரிகிறது.

## பாக். கோஷ்டி எல்லை மீறல்

புதுடில்லி, ஜன. 11

ஆயுதம் தாங்கிய பாகிஸ்தான் கோஷ்டி ஒன்று இந்திய எல்லைப்பகுதிக்குள் மீன் பிடிக்க வந்ததாயும், இதுகுறித்து ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

## அஸ்ஸாம் தேர்தல்

ஷில்லாங், ஜன. 11

அஸ்ஸாமில் 105 சட்டசபைத் தொகுதிகளுக்கும், 12 லோகசபைத் தொகுதிகளுக்குமான பொதுத் தேர்தல் பிப்ரவரி 19ம் திகதி முதல் 24ம் திகதி வரை நடைபெறும்.

## சைபிரஸுடன் ராஜீய உறவு

புதுடில்லி ஜன 11

சைபிரஸுடன் இந்தியா ராஜீய உறவு ஆரம்பித்துள்ளது. லெபனனிலுள்ள இந்தியத் தூதர் சைபிரஸிலும் இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## இந்தியா வரும் நியூஸிலாந்து எம். பி. க்கள்

புதுடில்லி, ஜன. 11

நியூஸிலாந்திலிருந்து 9 பேரடங்கிய பாராளுமன்றத் தூது கோஸ்டி ஒன்று, இந்தியா வருகிறது வருகிற தேர்தல் நடைமுறைகளைபற்றி இக்கோஷ்டி பரிசீலனை செய்தபின், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்யும்.

## பிஸர்ட்டா தளம்

டுனிஸ், ஜன. 11

பிஸர்ட்டாவிலுள்ள பிரெஞ்சுக் கடற்படைத் தளம் பற்றிய பேச்சுவார்த்தை நடத்தும் பொருட்டு. இருவர் கொண்ட தூது கோஷ்டி ஒன்று வருகிற திங்கட்கிழமை பாரிஸ் செல்லவிருக்கிறது.

திருவனந்தபுரம், ஜன. 11

சிறைவைக்கப்பட்டிருந்த கம்யூனிஸ்ட் தலைவர் திரு ஏ. கே. கோபாலனும், மற்றும் 10 பேரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

# டில்லியில் ஊநூ

புதுடில்லி, ஜன. 11

பர்மியப்பிரதமர் ஊநூ இன்று புதுடில்லி வந்தார். நேபாள மன்னர் மகேந்திராவும் திரு. ஊநூவும் நடத்திய பேச்சுவார்த்தைகள்பற்றி இன்று காட்மாண்டுவிலும், ரங்கூனிலும் ஒரு கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

புதுடில்லியில் ஸ்ரீ நேருவின் இல்லத்தில் தங்கியிருக்கும் திரு. ஊநூ நாளை இந்தியப் பிரதமருடன் வர்ஞசி செல்வார். காசி சர்வகலாசாலை விசேஷ பட்டமளிப் விழா ஒன்றில் அவருக்கு இலக்கிய டாக்டர்ப் பட்டத்தை வழங்கும். வருகிற புதன்கிழமை பர்மியப் பிரதமர் ரங்கூன் திரும்புவார்.

## பார்லிமெண்டில் பிரேரணைகள்

பருத்தித்துறை, வியாழன்

ஏப்ரல் மாதம் நாலாம்திகதியன்று பாராளுமன்றத்தில் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு வி. என். நவரத்தினம், உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. எம். சிவசிதம்பரம், கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. ஏ. சிவசுந்தரம் ஆகியோர் கூட்டாக கீழ்க்காணும் பிரேரணையைச் சமர்ப்பிப்பர்.

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ம் திகதியன்று அவசரகால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டபின்னர் இராணுவத்தினரது நடத்தை பற்றி விசாரணை செய்ய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும் என இச்சபை கருதுகிறது."

இதே தினத்தில் தோட்டப் பாடசாலைகள் சம்பந்தமாக ஐந்து அம்சத்திட்டப்பிரேரணை ஒன்றையும் உடுப்பிட்டி எம். பி. திரு மு. சிவசிதம்பரம் பிரேரிப்பார்.

## குண்டுப் பரீட்சை

நெவாடா, ஜன. 10

அமெரிக்கா நேற்று மற்றொரு அணு குண்டை நிலத்துக்கு அடியில் வெடித்துப் பரீட்சித்தது

# "இணைப்புத் தகடுகள் கழற்றப்படுவதைப் பார்த்தேன்"

## வவனியா புகையிரத விபத்து விசாரணையில் சாட்சியம்

குருநாகல், வியாழன்

"தண்டவாளங்களின் இணைப்புத் தகட்டை முதல் எதிரியான டிங்கிரி பண்டா கழற்றியதை நான் பார்த்தேன்." வவனியாவில் ரயில் தடம்புரண்ட சம்பவ வழக்கு குருநாகல் அஸைஸில் நடைபெற்றபோது 15 வயதுள்ள கே. ஆரியதாசா என்ற சிறுவன் மேற்கண்டவாறு தெரிவித்தான்.

ஆரியதாசா தொடர்ந்து கூறியதாவது: "எல்லா எதிரிகளையும் எனக்கு தெரியும். இணைப்புத் தகடு கழற்றிய சம்பவம் பற்றி யாரிடமாவது நான் சொன்னால் என்னைக் கொன்றுவிடுவதாக டிங்கிரி பண்டா பயமுறுத்தியிருந்தார். 1959-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ந் திகதி படம் பார்ப்பதற்காக வவனியாவிலுள்ள இந்திரா தியேட்டருக்குச் சென்றேன் தியேட்டரில் டிங்கிரி பண்டாவையும் குணபாலவையும் நான் சந்தித்தபோது, தாங்களும் படம் பார்க்கத்தான் வந்திருப்பதாகக் கூறி, தங்களுடன் வந்திருக்கும்படி என்னையும் அழைத்தார்கள். படம் ஆரம்பமாகி இரவு சுமார் 9-30க்கு முடிவடைந்தது. தியேட்டரிலிருந்து நாங்கள் எல்லோரும் வெளியே வந்த சமயம் பியதாசா, சைமன், சுமதிபாலா ஆகியோரைச்சந்தித்து ஹோட்டலொன்றில் தேநீர் அருந்தினோம். இதற்குப் பின்னர், நாங்கள் மூண்டு முறிப்பு சந்திக்குச் சென்றோம். அப்பொழுது, டிங்கிரி பண்டாவும் குணபாலாவும் தண்டவாளங்களின் இணைப்புத் தகடுகளைத் தாங்கள் கழற்றப் போவதாக என்னிடம் கூறினர். சுமதிபாலா இதை எதிர்த்துப் பேசினார். எதிர்பாராத இந்த நடவடிக்கையைப் பற்றி கேட்டதும், நான் பயந்து போனேன். டிங்கிரி பண்டாவின் மனதில் இப்படியான ஒரு தீய நோக்கம் இருந்திருந்தால் ஒருபோதும் வந்திருக்கமாட்டேன் என்றும் டிங்கிரி பண்டா மீது வைத்த நம்பிக்கையைக் குறித்தே வந்தேன் என்றும் நான் கூறினேன். இதைக் கேட்ட டிங்கிரி பண்டா, பயப்படுவதற்கு ஒன்றுமில்லையென்றும் இதனால் எதுவும் நடைபெற மாட்டாதென்றும் கூறினர். பொலிஸிடம் இது பற்றித் தாம் புகார் செய்யப்போவதாக சுமதிபால கூறினர். இதற்குப் பின்னர், பியதாசா, குணபாலா, சைமன் ஆகியோர் காட்டுக்குள் சென்று சில ஆயுதங்களை எடுத்து வந்தனர். அந்த ஆயுதங்களில் இரண்டை, இணைப்புத் தகட்டை கழற்ற உபயோகித்தனர். டிங்கிரி பண்டா தண்டவாளங்களின் மத்தியில் நின்று கொண்டு காவல் செய்தார். இணைப்புத் தகடுகளை கழற்ற முடியவில்லை என்று அவர்கள் தெரிவித்ததும், தனக்கு அதை கழற்றும் விதம் தெரியுமென்று கூறி இணைப்புத் தகடுகளை டிங்கிரி பண்டா கழற்றினர்.

அந்த இரவைக் கழிப்பதற்காக நான் பியதாசாவுடன் குடிசையொன்றுக்குச் சென்றேன். என்னுடன் மற்றவர்களும் வந்தனர். நாங்கள் அந்தக் குடிசைக்குள் நுழைந்ததும், ஹிரதமி என்பவர் அங்கு இருந்தார். குடிசைக்குள் நாங்கள் இருந்தபோது பெரியதொரு சத்தம் எங்களுக்குக் கேட்டது. புகையிரத தண்டவாளம் பக்கமாக ஏதோ சத்தம் கேட்டதாகவும் அங்கு போய் பார்க்க என்னையும் டிங்கிரி பண்டாவையும் வரும்படி ஹிரதமி அழைத்தார். அங்கு போனால் சில வேளை ஆபத்தில் மாட்டிக் கொள்வோம் என்று கூறி டிங்கிரி பண்டா போவதற்கு மறுத்துவிட்டார். பின்னர் நாங்கள் அங்கிருந்து புறப்பட்டு டிங்கிரி பண்டாவின் அறைக்குச் சென்றோம். அடுத்த நாட் காலை நான் எழுந்து பார்த்ததும் டிங்கிரி பண்டா அங்கு காணப்படவில்லை. நான் எனது வீட்டுக்குச் சென்றேன். இச்சம்பவம் பற்றி பொலிஸில் புகார் செய்யவேண்டும் என்று நான் நினைத்தபொழுதே பொலிஸார் அங்கு வந்துவிட்டனர். அவர்களிடம் நான் மேற்படி சம்பவம் பற்றி கூறினேன்."

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

# கோவா நிலைமை

பஞ்சிம், ஜன. 11

கோவாவில் இயங்கி வந்த ஒரே அரசியல் கட்சியான "யூனியன் நேஷனல்" ராணுவ கவர்னர் உத்தரவுப்படி கலைக்கப்பட்டது. போர்த்துக்கலில் டாக்டர் சலஸாரின் கட்சிக்கு இது கிளைக் கட்சியாய் இருந்தது. 15 ஆண்டுகளுக்குமுன் ஆரம்பமான இக் கட்சியில் அரசாங்க ஊழியர்கள் அனைவரும் சேரவேண்டுமென்பது ஏற்பாடு கோவாவிலுள்ள டச்சுக்காரர்கள் நன்றாக நடத்தப்படுவதாய் அவர்களின் நிலைமைபற்றிப் பார்வையிடச் சென்றிருந்த டச்சுப் பிரதிநிதி கூறினார். ராணுவ நடவடிக்கைக்கு முன் தங்கள் குடும்பத்தை தாயகத்துக்கனுப்பிய டச்சுக்காரர்கள், இப்போது மீண்டும் அவர்களை திருப்பியழைக்க ஆவல் கொண்டிருப்பதாயும் அவர் மேலும் கூறினார். கோவாவிலுள்ள போர்த்துக்கல் பிரஜைகள் இந்திய ராஷ்டிரபதிக்கு விஸ்வாசம் தெரிவிக்கப் போதிய அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. குறித்த தவணைக்குள் விஸ்வாசப் பத்திரத்தில் கையெழுத்திடத் தவறினால் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள்.

## ஊர்காவற்றுறை பட்டின சபைத்தலைவர் தேர்தல்

ஊர்காவற்றுறை, வியாழன்

ஊர்காவற்றுறைப் பட்டின சபையின் புதியதலைவர் தேர்தல் இம்மாதம்16-ந் தேதிநடைபெறும்என உள்ளூராட்சி உதவிக்கமிஷனர் அறிவித்துள்ளார்.

சென்ற மாதம் நடைபெற்ற தேர்தலில் ஐந்து வட்டாரங்களைக்கொண்ட இப்பட்டின சபைக்கு நான்கு அங்கத்தவர்கள் புதிதாகத்தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தலைவர் பதவிக்கு 5-ம் வட்டார அங்கத்தவர் திரு. எஸ். எம் அல்பிரட் போட்டியிடலாமெனச் சொல்லப்படுகிறது.

## சுகர்னேவுக்கு நேருவின் செய்தி

புதுடில்லி, ஜன. 10

இந்தோனேஷிய அதிபர் டாகடர் சுகர்னே, சமீபத்தில் செய்யப்பட்ட கொலை முயற்சியிலிருந்து உயிர் தப்பியதற்காக வாழ்த்தும் மகிழ்ச்சியும் தெரிவித்து பாரதப் பிரதமர் ஸ்ரீநேரு டாக்டர் சுகர்னேவுக்கு ஒருசெய்தி அனுப்பியுள்ளார்.

## டில்லியில் காமன்வெல்த் கல்வி மகாநாடு

புதுடில்லி, ஜன. 11

2வது காமன்வெல்த் கல்வி மகாநாட்டை பிரதமர் நேரு இன்று ஆரம்பித்துவைத்தார். 13 நாடுகளைச்சேர்ந்த 200 பிரதிநிகள் இம் மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

## டயர் திருட்டு வழக்கில் தண்டனை

தெஹிவளை, வியாழன்

வெறஹெரவிலுள்ள இ.போ. ச. கரேஜில் டயர்களுடன் கூடிய 5 மேலதிக சக்கரங்களைத் திருடியதாக ஐ. விஜயரத்ன, டபிள்யு ஏ. ரத்னசேன கே. பி. கே. பிரேமதாசா, கே. ஏ. வியோநிஸ், டபிள்யு. ஏ. விஜயரத்ன ஆகிய 5 பேர்கள் மீது குற்றமசாட்டித் தொடரப்பட்ட வழக்கில், குற்றவாளிகளாகக்கண்ட ஐவருக்கும், கொழும்பு தெற்கு மாஜிஸ்திரேட் திரு டி. எஸ். எல். பி. அபயசேகரா இரண்டுவருடக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

### மணி வாக்கு

'மன அமைதி அறவாழ்வின் விளைவே. ஆகவே அறவாழ்வைக் கடைப்பிடி'.


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு மார்கழி மீ 28 உ (12-1-62

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389


## கல்விக்கமிஷனின் இரு சிபார்சுகள்

தேசிய கல்விக் கமிஷன் மொழிவிஷயமாக இரு முக்கிய சிபார்சுகளைச் செய்திருக்கின்றது. ஒன்று இலங்கையிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் சிங்களத்தைக் கட்டாயபாடமாக்க வேண்டுமென்பது. மற்றொன்று, மலைநாட்டிலே இலங்கையுரிமையில்லாத (நாடற்ற) மாணவர்களுக்கு சிங்களத்தின்மூலமே பாடங்களை அரசாங்க உதவி பெறும் பாடசாலைகளில் கற்பிக்கவேண்டுமென்பது.

இவ்விரண்டு யோசனைகளை பற்றியும் 19 பேரடங்கிய இக் கமிஷனிலே, தமிழர் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள திருவாளர்கள் சு. நடேசபிள்ளை, பேரின்பநாயகம் இருவரும் தக்க காரணம்கூறி ஆட்சேபித்திருக்கும் விவரங்கள் நேற்றும் இன்றும் இப்பத்திரிகையில் வெளியாகியுள்ளன. இவ்விருவர் மட்டுமல்ல. கமிஷன் தலைவரான பேராசிரியர் ஜே. ஈ. ஜெயசூரியா உள்ளிட்டு, தமிழரல்லாத மற்றும் அறுவர், சிங்களத்தை யாவரும் படிப்பதற்கு உரிய வசதிகள் அளிக்கப்பட்டால் போதுமென்றும், நிர்ப்பந்தமாக யார்மீதும் எம்மொழியும் திணிக்கப்படக்கூடாதெனவும் தெரிவித்திருக்கிறார்கள். தமிழரின் இரு பிரதிநிதிகள் மட்டுமன்றி, தலைவர் உள்ளிட்டு மற்றும் சிலரும் தெரிவித்துள்ள இக்கருத்தை அலட்சியம்செய்து ஒதுக்கிவிட முடியாது.

தேசிய ஒற்றுமையைக் கருதியே, சிங்களத்தைக் கட்டாயபாடமாகக் கற்பிக்கவேண்டுமென்று கமிஷனிலுள்ள பெரும்பாலாரும் காரணம் கூறுகின்றார்கள். ஆனால் சமூக ஒற்றுமை நிலவி வந்த இந்நாட்டிலே, சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்ட பின்புதான், வகுப்பு வேற்றுமைகளும்கலவரங்களும் ஏற்பட்டன. கட்டாய சிங்களம், ஒற்றுமை ஏற்படுத்துவதற்குப் பதிலாக வேற்றுமையையும் மனக் கசப்பையுமே கிளப்பிவிட்டிருக்கிறது.

மேலும் வடக்கு மாகாணத்தில் பல கல்லூரிகளிலும் முன்னர் தாங்களே இஷ்டப்பட்டு சிங்களத்தைக் கற்பித்து வந்தனர். ஆனால் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேறிய பின், அக்கல்லூரிகளில் சிங்களம் கற்பிப்பதை நிறுத்தி விட்டார்கள். எல்லாக் கல்லூரிகளையும் அரசாங்கம் பொறுப்பேற்றதால், இப்போது கட்டாய சிங்களத்தைப் புகுத்தக் கூடும். ஆனால் மக்களின் இஷ்டத்துக்கு மாறாக எடுக்கும் நடவடிக்கை, மனக் கசப்பை அதிகரிக்கும். இதனால் நிச்சயம் ஒற்றுமை பலப்பட முடியாது. இதற்கு மாறாக வேற்றுமைகளே அதிகரிக்கவும் கூடும்.

மலை நாட்டிலே நாடற்றவர்களாக்கப்பட்டுள்ள தமிழ் மாணவர்கள் சிங்கள மூலமே பாடங்களைக் கற்கவேண்டுமென்று செய்தால் அவர்கள் படிப்பு தடைபடும். தாய் மொழியிலேயே குழந்தைகளுக்குப் பாட போதனை இருக்கவேண்டுமென்ற அடிப்படைக் கொள்கையை இது மீறுவதுமாகும். பிரஜைகளாகவுள்ள தமிழ் மாணவர், தமிழ் மூலமும், நாடற்ற தமிழ் மாணவர் சிங்கள மூலமும் பாடம் கற்கவும் செய்யும் ஏற்பாடு நகைப்புக்கும் கண்டனத்துக்கும் இடமளிப்பதுடன் நாடற்றவர் பிரச்சினையும் அதிக சிக்கலாகலாம்.

கமிஷனிலுள்ள இரு தமிழ்ப் பிரதிநிதிகளும் சுட்டிக் காட்டியதுபோல், அரசாங்க மொழிப் பிரச்சினை இன்னும் முடிவாகத் தீர்க்கப்படவில்லை. அதை திருப்திகரமாகத் தீர்ப்பதற்கு முன், கல்வி போதனை மொழி விஷயத்தில் பாரதூரமான மாறுதல்களை அவசரப்பட்டுச் செய்வது விசேஷமாகாது.

# அரசாங்கம் ஒன்ரு? இரண்டா?

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டார். திரு. பிலிப்குணவர்த்தன கூறியதாவது:-

"வேலைநிறுத்த நிலைமைபற்றி சபையில் விவாதிக்கப் பட்ட பொழுது வேலைநிறுத்த நிலைமையை பேச்சுவார்த்தை மூலம் சமரசமாகத் தீர்த்துக் கொள்வதற்கான அடிப்படை அம்சத்தைக்கொண்ட ஒரு அறிக்கையை சபை முதல்வர் திரு. சி பி. டி' சில்வா வெளியிட்டார். இந்த அறிக்கை சமபந்தமாக இதுவரை எந்த வித முயற்சிக்கும் நடவடிக்கை எடுக்கப்படாதிருப்பது ஒரு புறமிருக்க இதற்கு முற்றிலும் மாருன முறையில் அரசாங்கம் குறிப்பாக பிரதம மந்திரியும் நிதமந்திரியும் வேறு விதமான நடவடிக்கைகளை, தொழிலாளர்களுக்கு மேலும் துன்பத்தையும் கஷ்டத்தையும் கொடுக்கக் கூடிய கெடுபிடி நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். இந்த நடவடிக்கைகளுக்கு உயர் பதவியிலுள்ள ஒருவரும் பிரதம மந்திரிக்கும் நிதிமந்திரிக்கும் உடந்தையாக இருப்பதாக நாங்கள் அறிகிரேம்.

### வீடுகளில் பொலிசார் சோதனை

சபை முதல்வர் சமரசத்துக்கான அறிக்கை விட்டபின்னர் தொழிலாளர் காரியாலயங்களையும் அவர்களுடைய வீடுகளையும் பொலிசார் சோதனை செய்துள்ளனர். வீடுகளில் பொலிசார் கிண்டிக் கிளறிச் சோதனை செய்தும் அவர்கள்மீது குற்றம் சாட்டக்கூடிய தஸ்தாவேஜுகள் எதையும் அவர்கள்பெறவில்லை.

தொழிலாளர்களுக்கு மேலும் மேலும் துன்பமும் கஷ்டமும் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தத்தான் அரசாங்கம் விரும்புகிறதா?

சபைமுதல்வர் ஒரு குரலில் சமாதான சூழ்நிலைபற்றிப் பேசுகிரூர். பிரதமரும் அவரது பார்லிமெண்டரிக் காரியதரிசியும் வேறுவிதமாக நடந்து கொள்வது வருந்துதற்குரியது.

அரசாங்கம் கீழ்த்தரமான நடவடிக்கைகளைத் தான் செய்யப்போகிறதா! தொழிலாளர்களுக்கு மேலும் மேலும் துன்பம்கொடுக்கக் கூடிய கெடுபிடி நடவடிக்கைகளை பிரதமரும் அவரது பார்லிமெண்டரிக் காரியதரிசியும் நிதிமந்திரியும் உயர் பதவியிலுள்ள மற்ருெருவரின் உடந்தையுடன் மேற்கொள்வதை தொழிலாளர்கள் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டார்கள்.

சபை முதல்வர் ஒரு குரலிலும் அரசாங்கம் குறிப்பாக பிரதம மந்திரியும் அவரது பார்லிமெண்டரிக் காரியதரிசியும் மற்ருெரு குரலிலும் பேசுகின்றனர். இரண்டு அரசாங்கம் இயங்கி வருகிறதா என்று கேட்க வேண்டும் போல் தோன்றுகிறது.

### அமுல் நடத்த தயாராகிருர்

கவர்னர்ஜெனரல் சில உத்தரவுகளை பிறப்பித்துள்ளதாகவும் அவற்றை அமுல் நடத்துவதற்கு நிதிமந்திரி தயாராகி வருவதாகவும் கேள்விப்படுகிரேம்.

பொறுப்புணர்ச்சி உள்ளவர்களாக இருந்தால் தொழிலாளர்களின் உரிமைகளைத் தட்டிக் கழிக்காமல் ஆவன செய்ய வேண்டும். தொழிலாளர்களின் உரிமைகளைத் தட்டிக் கழித்து விட்டு 'கெடுபிடி' நடவடிக்கைகளில் இறங்கினால் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா பேசுகையில் திரு பிலிப் குணவர்த்தன கூறியதை தாம் பூரணமாக ஆதரிப்பதாகக் கூறினர். டாக்டர் கொல்வின் மேலும் கூறியதாவது:

வேலைநிறுத்த நிலைமையைப் பேச்சுவார்த்தை மூலம் சுமுகமாகத் தீர்ப்பதற்கு அரசாங்கம் பகிரங்கமாக அழைப்பு விடுத்தது. ஆனல் தனது வழமையான இரட்டை நாக்குக் கொள்கையை அது காட்டி விட்டது.

சபை முதல்வர் விடுத்த அறிக்கை சம்பந்தமாக தொழில் மந்திரியைச் சந்தித்துக் கேட்டேன். மந்திரிசபையைக் கலந்தாலோசித்துச் சொல்வதாக அவர் கூறினர் ஆனல் அவர் பின்னர் எதுவுமே சொல்லவில்லை. தொழில் கமிஷனரிடம் இதுபற்றிக் கேட்டேன். தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பிய பின்னரே மற்ற விஷயங்கள் என்ற தொனியில் அவர் பதிலளித்தார்.

### உறுதிமொழியை நம்பமாட்டார்கள்

துறைமுகத் தொழிலாளர்களானலும் சரி இதர தொழிலாளர்களானலும் சரி பொது மக்களானலும் சரி அரசாங்கத்தின் உறுதிமொழிகளை இனி நம்பமாட்டார்கள். இதுவரையில் இந்த அரசாங்கம் தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதில்லை.

அரசாங்கத்தின் உத்தரவின் மீது பொலிசாரும் ராணுவத்தினரும் 'கெடுபிடி' நடவடிக்கைகளில் இறங்கியதை ஆட்சேபித்து இன்று மற்றும் இரு ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்.

கண்டி தபால் நிலையத்திலும் இன்று வேலைநிறுத்தம் நடைபெற்றதாக டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா தெரிவித்தார்.

# மாணவர் போஷாக்கை 'பணிஸ்' அதிகரிக்கிறதா?

## சுகாதார இலாகா ஆராயும்

கொழும்பு, வியாழன்

பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் இலவச பணிஸும் பாலும் பிள்ளைகளின போஷாக்கை எந்த அளவுக்கு அதிகரிக்கின்றது என விசேஷ ஆராய்ச்சி நடாத்தப்படவிருக்கிறது.

சுகாதார இலாகாவைச் சேர்ந்த போஷாக்கு பரிசோதனை நிபுணர்கள் இந்த ஆராய்ச்சியை நடாத்துவார்கள். இவர்களுக்கு வேண்டிய வசதிகளை கல்வி இலாகா வழங்கும்.

கல்வி இலாகாவின் புள்ளி விவரப்படி 1,663,027 பிள்ளைகள் இலவச மத்தியான போசனம் உண்டுவருவதாகத் தெரிகிறது. இந்த உணவை உண்ணுத மாணவர்களின் போஷாக்கு நிலைமையைப் பரிசோதனை செய்தபின்னரே, ஏனைய பிள்ளைகளின் போஷாக்கு நிலைமைகளை நிபுணர்கள் ஆராய்வர்.

## நேருவும் குழந்தைகளும்

அலஹபாத், ஜன. 11

கர்ச்சன என்னும் இடத்தில் நடந்த பொதுக்கூட்டமொன்றில், குழந்தைகளிடையே மாலைகளை விநியோகிப்பதற்காக பிரதம மந்திரி நேரு, பந்தோபஸ்து ஏற்பாடுகளையெல்லாம் முறித்துக் கொண்டு மேடையிலிருந்துகுதித்து குழந்தைகள் கூடியிருந்த பகுதிக்குள் பிரவேசித்தார்.

பெண்களும் குழந்தைகளும் அமர்ந்திருந்த பகுதிக்கு வழியில்லாதிருப்பதைக்கண்ட பிரதம மந்திரி கோபத்துடன் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

இது என்ன வேடிக்கை? நான் குழந்தைகளைப் பார்க்க வந்திருக்கிறேன். ஆனல் உடனடியாக அவர்களிடம் செல்ல வழி எதுவும் காணும்"

அடைப்பைத் தாண்டிக் கொண்டுசென்று நேரு, குழந்தைகளிடையே மாலைகளை விநியோகித்தார்.

## நடராஜர் விக்கிரகம்

### திருச்சியிலிருந்து வந்துசேர்ந்தது

மாவிட்டபுரம், வியாழன்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் புதிதாகப் பிரதிஷ்டை செய்ய இருக்கும் "சிவகாமசுந்தரி சமேத நடராஜ மூர்த்தியின் திருவுருவம் திருச்சியிலிருந்து விமானமார்க்கமாகக் காங்கேசன் துறை விமானநிலையத்துக்கு இன்று எடுத்துவரப்பட்டு விமான நிலையத்தில் இருந்து வேதமோதப்பட்டு திருமுறைப் பஜனை ஆகியவற்ருேடும் மங்கள வாத்தியங்களோடும் ஊர்வலமாக காங்கேசன் துறை வீதி வழியாக மாவிட்டபுரம் வந்தடைந்தது.

தையிட்டி இ. வல்லிபுர ஆசாரி தமது சொந்த செலவில் இவ்விக்கிரகத்தை செய்வித்தார். இத்திருவுருவம் சிதம்பரம் குஞ்சித பாதஸ்தபதியால் சிதம்பரத்தில் வைத்து உருவாக்கப்பட்டு திருச்சி விமான நிலையத்துக்குச் சென்ற மாதம் 28-ந் திகதி எடுத்துச் செல்லப்பட்டது. ஆனல் சுங்க இலாகாவினரின் பரிசோதனையால் தாமதமேற்பட்டது.

## கோபாலன் விடுதலை

எர்ணாக்குளம், ஜன. 10

கேரள கர்ஷக சங்கத்தின் விவசாயம் கிளர்ச்சி சம்பந்தமாக சென்ற ஒரு மாத காலமாக காவலில் வைக்கப்பட்டிருந்த கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் திரு ஏ. கே. கோபாலனும் மற்றும் பத்து பேரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை, புதன்

புலோலி மெதடிஸ்த தமிழ்க் கலவன்பாடசாலையில் இருந்து அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் நடத்திய கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றிய 11 மாணவர்களும் 5 முதல் பிரிவுத் தேர்வுடன் சித்தியடைந்துள்ளனர்.

## ஐயாறன் எழுதுவது

கதிர்காமமுருகனுக்கு அரோகரா! இப்போது என்ன 'அரோகரா' என்று கேட்கிறீர்களா? கதிர்காம மடங்களை அகற்றிவிட திட்டம் போட்டார்களல்லவா? அந்தத் திட்டத்தின்மீது நடவடிக்கை எடுப்பதை அரசாங்கம் நிறுத்தி வைத்துவிட்டதாக அறிந்தேன்.

அந்த மடங்களுக்கெல்லாம் நஷ்டஈடு கொடுக்கவும், நிலங்களை வாங்கவும் அதிக பணம் வேண்டுமாம். இப்போது பண நிலைமை சரியாக இல்லையாதலால், இந்த நடவடிக்கையை இப்போதைக்கு எடுப்பதில்லை என்று தீர்மானித்துள்ளதாக ஓர் அதிகாரி தெரிவிக்கிருர்.

* * *

மடங்களை அகற்றப்போவதாக பல வருடங்களாக பயமுறுத்தி வந்தார்கள். எவ்வளவோ ஆட்சேபித்தும் கேட்கவில்லை. ஸ்ரீராமகிருஷ்ண மடம் அங்கு இருப்பது சிலருக்கு கண்ணை உறுத்துகிறது. அவர்களை அங்கிருந்து கிளப்பிவிட்டு, அதை ஏதோ ஒரு காரியாலயமாகச் செய்யத் திட்டம் போட்டார்கள்.

சென்றமுறை கதிர்காமம் சென்றபோது, மடங்களை அகற்றக்கூடாதென்று மகஜரில் கையெழுத்து வாங்கிவந்தனர். அங்கு முருகனிடம் சென்று "மடங்களை அகற்ருமல் பார்த்துக் கொள். அகற்றினல் அடியார்கள் பலருக்கு மிகவும் வசதியீனமாகப் போகும்" என்று சொல்லிவிட்டு வந்தேன். அது வீண் போகவில்லை.

* * *

ஃடிரைக் முதலிய பல காரணங்களால், இப்போது பண நெருக்கடி மிக அதிகம். நாட்டில் கைத்தொழில் அபிவிருத்திமுதலியவை எவ்வளவோ அவசரமாகச் செய்ய வேண்டியுள்ளது. கதிர்காமத்தில் இருக்கும் மடங்களை அகற்ற வேண்டிய அவசியமே இல்லை. அகற்றினல் பக்தர்களின் சாபம் தான் கிடைக்கும். ஆகவே மடங்களை அகற்றும் யோசனையை அடியோடுவிட்டு, அங்கு பக்தர்களுக்கு அதிக வசதிகளைச் செய்து கொடுப்பதில் இனி அதிக கவனம் செலுத்துவது புத்தியாகும். பல மடத்தார்களும் அவற்றை சுத்தமாக வைத்து, பலருக்கும் பயன்படும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

* * *

பொங்கல் வரும் பின்னே, வாழ்த்துக்கள் வரும் முன்னே! வருகிற ஞாயிற்றுக்கிழமை தான் தைப்பொங்கல். என்ருலும் வண்ண ஓவியங்களும், சினனக் காவியங்களுமடங்கிய அழகான வாழ்த்துக் கடிதங்கள் ஒரு வாரமாகவே வர ஆரம்பித்துவிட்டன!

வாழ்த்து அனுப்பிய அன்பர்களுக்கும் அனுப்பாத அன்பர்களுக்கும் எனது உளம் தோய்ந்த வாழ்த்துக்களை இதன் மூலம் அனுப்பி வைக்கிறேன்.

* * *

ஒரு சமாச்சாரம் நாளை தெரிவிக்கிறேன். சற்றே காத்திருங்கள்.

## ஆலைகள் மூடப்பட்டன

கொழும்பு, வியாழன்

கடந்த சில மாதங்களாக ஏற்றுமதியில் ஏற்பட்டகஷ்டங்கள் காரணமாக கொப்பரா, தேங்காய் துருவல். தும்பு, தேங்காய் எண்ணெய் ஆலைகள் பல தங்கள் தொழில்களை மூடிவிட்டன. இந்த ஆலைகளில் வேலைசெய்துவந்த தொழிலாளர்கள் பலர் வேலையை இழந்துவிட்டனர் தெங்குப் பொருள்களின் விலையில் பெருமளவு வீழ்ச்சி ஏற்படக்கூடுமென்று உற்பத்தியாளர்கள் அஞ்சுகின்றனர்.

# கதிர்காமம் புனருத்தாரண வேலை ஒத்திவைப்பு

## பணக்கஷ்டம் காரணம்

கொழும்பு, வியாழன்
களனி ராஜமகா விகாரைக்கு அருகாமையிலுள்ள 30 ஏக்கர் நிலப்பரப்பை 'புனித பகுதி' யாக்குவதெனச் சில காலத்துக்கு முன்னர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் காரணமாக மேற்கொள்ளவேண்டிய புனரமைப்பு வேலைகளை அரசாங்கம் ஒத்தி வைக்கத் தீர்மானித்துள்ளது. கதிர்காம புனரமைப்பு வேலைகளையும் இதேமாதிரி ஒத்தி வைப்பதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

காணிகளை வாங்கிக் கொள்வதற்கும், அப்பகுதிகளிலுள்ள வீட்டுச் சொந்தககாரர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கும் பெருந்தொகையான பணம் தேவைப்படுகிறதாகையாலேயே அரசாங்கம் இந்த முடிவுக்கு வந்துள்ளது.

ராஜமகா விகாரை, கதிர்காமப் பகுதிகளைப் புனித பகுதிகளாகப் பிரகடனஞ் செய்வதற்கு அரசாங்க நகர அமைப்புத் திட்ட அதிகாரி திட்டம் வரைந்து தலஸ்தாபன அமைச்சருக்குச் சமர்ப்பித்திருந்தார்.

ராஜமகா விகாரைக்கு எதிர்ப்புறமாக உள்ள கடைகள் நீக்கப்படவேண்டும் எனவும், அருகாமையில் உள்ள வீடுகள் நீக்கப்பட வேண்டும் எனவும் நகர அமைப்புக் திட்ட அதிகாரி சிபார்சு செய்திருந்தார். வீடுகளுக்குப் பதில் வீடுகள் அமைக்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறியிருந்தார்.

களனிப் பகுதி 'புனித பகுதி' யெனப் பிரகடனஞ் செய்யப்படும்வரை, ராஜமகா விகாரை நிர்வாகத்தை டிறஸ்டீ திரு. எஸ். டி. என் சோமரத்னவே தொடர்ந்தும் மேற்பார்வை செய்துவருவார்.

——

## தேர்தல் களத்தில்...

(-2ம்பக்கத் தொடர்ச்சி)

ரசின் முக்கிய பிரசார இயந்திரமான அவரது மகள் ஸ்ரீமதி இந்திரா காந்தி இம்மாதம் 3வது வாரத்தில் தமிழ் நாட்டுக்கு விஜயஞ் செய்து பிரசாரத்தீடுபடுவாரெனத் தெரிகிறது.

### அண்ணாத்துரை சுதந்திரா போட்டி?

காஞ்சிபுரம் சட்டசபைத் தொகுதியில் திரு. சி. என் அண்ணாத்துரையை எதிர்த்து சுதந்திராக் கட்சி அபேட்சகர் ஒருவர் நிறுத்தப்படுவாரெனத் தெரிகிறது.

### சுதந்திரா

சென்னை நகரிலுள்ள 10 சட்டசபைத் தொகுதிகளில் 9 இடங்களுக்கும் வடசென்னை தென்சென்னை ஆகிய இரு மக்கள் சபைத் தொகுதிக்கும் சுதந்திரக் கட்சி அபேட்சகர்கள் நிறுத்தப்படுவார்கள்.

### ஒரே மேடையில் தேவர்-ராஜாஜி

பொங்கலன்று சுதந்திரக்கட்சித்தலைவர் ராஜாஜியும்முன்னேற்றக்கட்சித்தலைவர்பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரும் மதுரையில் ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்கிறார்கள். ஆனால் இதன்பின் தங்கள் தேர்தல்பிரசாரங்களை இருவரும் ஆரம்பிப்பர்.

### வானொலியில்

இந்திய தேர்தல் அதிகாரி திரு. கே. வி. கே. சுந்தரம் ஜனவரி 15, 21, 29ம் திகதிகளில் வானொலியில் உரை நிகழ்த்துகிறார்.

வாக்களிப்பது எப்படி என்பதுபற்றி இரவு 9-30 மணியிலிருந்து 15 நிமிட நேரம் நடைபெறவிருக்கும் இவரது பேச்சை, தமிழில் மொழிபெயர்த்து சென்னை, திருச்சி வானொலி நிலையங்கள் ஒலிபரப்பும் தேர்தலைப் பற்றிய ஓர நாடகங்களும் ஒலிபரப்பூற் பாடாகியுள்ளதாம்.

## கிராமக்கோடு அதிகநாள் நடைபெற வேண்டும்

முள்ளியவளை, வியாழன்
"புதுக்குடியிருப்புக் கிராமக் கோர்ட்டில் இப்போது,மாதத்தில் இரு தினங்களே வழக்கு விசாரணைகள் நடைபெறுகின்றன. இது போதாமலிருப்பதால், 4 நாட்கள் விசாரணை நடைபெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவேண்டும்."

மேற்கண்டவாறு கூறும் மகஜர் ஒன்றை, புதுக்குடியிருப்புக் கிராமசபைததலைவர் திரு. க. குணலிங்கம், வவனியா உள்ளூராட்சி உதவி அதிபருக்கும், பாராளுமன்றப் பிரதிநிதிக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

பரந்துள்ள புதுக்குடியிருப்புக் கிராமசபையை இரண்டாகப் பிரிக்கும் விஷயமாக ஒரு முடிவுக்குவர வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்

மேற்படிமகஜரின் பிரதிகள், கரைதுறைப்பற்றுக் காரியாதிகாரிக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## ரூ. 30 லட்சம் அதிக வருமானம்

கொழும்பு, வியாழன்
கடந்த 10 மாதங்களில் துறைமுகம், தானியக்கிடங்குகளின் வாடகை ஆகியவற்றில் அரசாங்க வருமானம் 20 லட்சம் ரூபாய்க்குமேல் குறைந்திருக்கிறது. ஆனால் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டணங்கள் மூலம் ரூபா 30 லட்சத்துக்கு மேல் அதிகவருமானம்கிடைத்திருக்கிறது

——

## திரு. மாக்மில்லன் பதவிக்காலம்

லண்டன், ஜன 11
இன்றுடன் திரு. மாக்மில்லன் பிரிட்டிஷ் பிரதமராக 6 வருடகாலமாகப்பதவிவகித்திருக்கிறார். 68 வயதான பிரிட்டிஷ் பிரதமர் 1957-ம் ஆண்டு ஜனவரி 10-ம் திகதி பதவிக்கு வந்தார்.

——

## பிரதமருக்கு வரியிறுப்பாளர் கோரிக்கை

அனுராதபுரம், வியாழன்
அனுராதபுரிம் பாதுகாப்பு சபைக்கு ஒரு ஜெனரல் மானேஜரை நியமிக்கும்படி வரியிறுப்பாளர் சங்கம் பிரதமருக்கு விண்ணப்பித்திருக்கிறது.

# ஆயுள்வேத வைத்திய கல்லூரி அதிபர் நியமனம்

## காங்கிரஸ் ஆட்சேபனை

கொழும்பு, வியாழன்
ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியின் புதிய அதிபர் நியமனத்துக்கு அகில இலங்கை ஆயுள்வேத காங்கிரஸ் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

இப்பதவிக்கு விண்ணப்பித்திருந்த ஏனைய விண்ணப்பதாரிகளின் தராதரங்களை அரசாங்க சேவைக் கமிஷன் பார்வையிடவில்லை எனவும் ஆயுள்வேத காங்கிரஸ் முறையிட்டுள்ளது. பார்லிமெண்ட் எம். பி.க்களுக்கும் மந்திரிகளுக்கும் புதிய அதிபர் நியமனம் பற்றித் தனது ஆட்சேபனையை ஆயுள்வேத காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

ஆயுள்வேத வைத்தியத்தின் வளர்ச்சியைப் பொறுத்தவரை பிரஸ்தாப பதவி முக்கியத்துவம் வாய்ந்ததென்றும், அரசாங்க சேவைக் கமிஷனுக்குத் தாம் இதுபற்றி முறையிட்டுள்ளதாகவும், ஆனல் கமிஷன் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் காங்கிரஸ் கூறியுள்ளது.

ஆயுள்வேத வைத்தியத்தில் திறமையும், சிங்களம், ஆங்கிலம், சமஸ்கிருதம், ஆகிய மொழிகளில் நிறைந்த அறிவும், ஆயுள்வேத வைத்தயத்தைப் பயிற்றுவதில் அனுபவமும், பிரஸ்தாப பதவிக்கு வேண்டிய தராதரங்கள் எனக் காங்கிரஸ் எடுத்து விளக்கியுள்ளது.

காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. நவிட்டிகலையும், பொதுக் காரியதரிசி திரு. கே. டி. பி. பியசேனவும் பார்லிமெண்டரி எம். பி.ககளுக்கு முறையிட்டனர்.

# மாணவர்கள் மோதல்: 4 பேர் ஆஸ்பத்திரியில்

வேருவலை, வியாழன்
வேருவலை மாஸல்ல என்ற இடத்திலுள்ள அரசினர் உயர்தரப் பாடசாலையில்நடைபெற்ற ஒரு சச்சரவைத் தொடர்ந்து 4 மாணவர்கள் களுத்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலையைச் சுற்றியுள்ளவர்கள் வந்து, சண்டையை நிறுத்தும்வரை மாணவர்களின் 'மோதல்' தொடர்ந்து நடைபெற்றது. இம்மோதலில் பாடசாலைக் கதிரைகள் மற்றுப் போத்தல்கள் கற்கள் யாவும் இடம்பெற்றிருந்தன. பாடசாலையில் இந்தச் சச்சரவு வருவதற்கான காரணம் இன்னும் ரகசியமாகவே இருந்து வருகிறது இது சம்பந்தமாக பல மாணவர்களை பொலிஸார் விசாரித்தனர்.

இந்தப் பாடசாலை இந்தவருடம் ஜனவரிமாதம் இரண்டாம் திகதி ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனல் பாடசாலையின கூரை யோசமான நிலையில் இருந்ததினை பாடசாலை ஆரம்பம் ஜனவரி மாதம் 9-ம் திகதிக்கு ஒத்தி போடப்பட்டது 9-ம் திகதி காலை மாணவர்கள் பாடசாலைக்குச் சென்றதும் மீண்டும் பாடசாலை இம்மாதம் 16-ம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டது காரணம் பாடசாலைக் கூரை இன்னும் திருத்தப்படாததே இந்தஅறிவித்தலைத்தொடர்ந்துதான் மாணவர்களிடையே மோதல் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

——

## விளையாட்டு செய்திகள்

வவனியா, வியாழன்
நெல்லியடி விளையாட்டுக் கழகக்கோஷ்டி ஒன்று முல்லைத்தீவு, வவனியா, மன்னார் ஆகிய விளையாட்டுக் கழகங்களுடன் சிநேகபூர்வமான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும்பொருட்டு சென்ற 8, 9, 10 ஆகிய தேதிகளில் வவனியா விளையாட்டுக்கழகங்களுடன் விளையாடின. கடந்த திங்கட்கிழமை வவனியா றேமாஸ் விளையாட்டுக்கழகத்துடன் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் 2-1 கோலால் நெல்லியடிவீரர் வெற்றியீட்டினர்.

அனறு பிற்பகல் வவனியா உதைபந்தாட்டத் தெரிவுக கோஷ்டியுடன் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் வவனியாத் தெரிவுக்கோஷ்டியினர் 3-1 கோலால் வெற்றியீட்டினர்.

செவ்வாய்க்கிழமை வவனியாப் பொலிஸ்கோஷ்டியுடன் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் நெல்லியடி விளையாட்டுக் கோஷ்டியினர் 2-0 கோலால் வெற்றியீட்டினர்.

# வங்கி ஊழியர் தகராறு

## விசாரணைக்கு எடுக்கப்பட்டது

கொழும்பு, வியாழன்
வங்கி ஊழியர் தகராறை விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட தொழில் கோர்டு புதன்கிழமை மாலை விசாரணையை நடத்த ஆரம்பித்தது. திரு. எஸ். பி. யட்டவராவின் தலைமையில் விசாரணை நடைபெற்றது. திரு. டி. பி. டி. எஸ். முனசிங்கா, திரு. எஸ். சி. டி. சில்வா ஆகியோர் கோர்ட்டின் ஏனைய அங்கத்தவராவர்.

வர்த்த வங்கிகள் சங்கத்தின் பிரதிநிதிகளாகத் திரு. சாம் கதிர்காமரும், திரு. ஜே. சி. பைர்னெல்லும் சமுகமளித்திருந்தனர். திரு. பாலா தம்புவும் திரு. பிறின்ஸ் ராஜசூரியாவும் வங்கித் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் பிரசன்னமாகியிருந்தனர்.

இலங்கை வங்கியின் பிரதிநிதிகளாக திரு. வேர்ணன் விஜயதுங்காவும், திரு. ட்றெவோர் டி சேரமும் சமுகமளித்திருந்தனர். திரு. எம். ஆர். ஆஸ்ட்பெரியும் லென் விரசேகராவும் தொழிலாளர் சம்மேளனத்தின் சார்பில் சமுகமளித்திருந்தனர்.

வர்த்தக வங்கிகள் சங்கக் காரியதரிசி திரு. ஜீ. குக், இலங்கை வங்கியின் பொது நிர்வாகர் திரு. சி. லோகநாதன் ஆகியோரும் வழக்கு விசாரணையின்போது சமுகமளித்திருந்தனர்.

தொழில் கோர்டு தொடர்ந்து இன்று 2 மணிக்கும் விசாரணையை நடத்தும்.

# "சோஷலிஸ முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது"

—பீட்டர் கெனமன்

வத்தளை, வியாழன்
"ஐக்கிய தேசிய கட்சி நாட்டைத் தவறான வழியில் இட்டுச் செல்கிறது. முன்னேற்ற சக்திகள் அவைகளுக்கு இடம் கொடுக்க கூடாது" என திரு. பீட்டர் கெனமன் கம்யூனிஸ்ட் கட்சி கூட்டமொன்றில் பேசும்போது கூறினர்.

"அரசாங்கத்தின் பலவீனமான கொள்கைகளே தவறான வழியில் மக்களைச் செலுத்த இவ்விதகட்சிக்கு ஊக்கத்தை ஏற்படுத்துகிறது. அரசாங்கத்தை நிறுவ அதிகாரம் கொடுத்த மக்களை குழப்ப வேண்டாம் என அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். காலஞ் சென்ற பிரதமரின் கொள்கைகளை அமுல்நடத்துவதற்கான பலம் அரசாங்கத்திற்கு கிடையாது. சோஷலிச முன்னேற்றம் தடைப்பட்டிருக்கிறது" என்றும் திரு. பீட்டர் கூறினர்.

# "வேலைநிறுத்தம் அரசாங்கத்தை வீழ்த்தமுடியாது"

## சுகாதார மந்திரி திரு. ஜயசூரியா பேச்சு

அப்புத்தளை, வியாழன்
"இலங்கையில் ஏராளமான ஜோஸ்யர்கள் இருக்கிறார்கள். அவர்களில் திரு டட்லிசேனநாயகாதான் அதிகப் பிரபல்யம் வாய்ந்தவர். ஆனல் இந்த அரசாங்கத்தின் வீழ்ச்சிபற்றி அவர் கூறுக் ஜோஸ்யம் மட்டும பலிப்பதில்லை" என இங்கு ஆஸ்பத்திரி அஸ்த்திவாரக்கல் நாட்டு வைபவத்தில் பேசிய சுகாதார மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியா கூறினர்

"ஜனவரி 5ம் தேதி பொது வேலை நிறுத்தம் படுதோல்வியடைந்ததைப் பற்றி டாக்டர் என். எம். மௌனம் சாதிக்கிறார். இலங்கை மக்களில் பெரும்பாலோர் தேசபக்தி மிகுந்தவர்களாதலால் அரசாங்கம் விழ்ச்சியடைவதை அவர்கள் அனுமதிக்கமாட்டார்கள். 80 சத விகிதத்துக்கு மேற்பட்ட அரசாங்க ஊழியர்கள் வேலைக்கு வந்தது இதை நிரூபித்துவிட்டது.

வேலை நிறுத்தங்களோ, லங்காசமசமாஜக் கட்சி, மக்கள் ஐககிய முன்னணி, யு. என்.பி. ஆகிய கட்சிகளின் கூச்சலோ எங்கள் அரசாங்கத்தை வீழ்த்த முடியாது" என்றும் அவர் கூறினர்.

## மாரடைப்பால் மரணமானர்

களுத்துறை, வியாழன்
களுத்துறை பொலிஸ் பயிற்சிப்பாடசாலையைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஏ. எம். எல். பண்டார, காலையில் பருகிய தேநீருக்குப்பின்னர் திடீரென மூர்ச்சித்துமரணமானர். மரண விசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு யு. எம். எம். சலி, மாரடைப்பு காரணமாக இன்ஸ்பெக்டர் பண்டார மரணமானர் எனத் தீர்ப்பளித்தார்.

——

## பாலர் வகுப்பு ஆசிரியர்களுக்கு விசேஷ பயிற்சி

பேராதனை, வியாழன்
பாலர்வகுப்பு போதனமுறை பற்றி ஆசிரியர்களுக்கு விசேஷ பயிற்சியளிக்கும் ஏற்பாடு சீக்கிரம் ஆரம்பிக்கப்படும் என கல்வி மந்திரி தெரிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி சிலவருடங்களுக்கு முன் கைவிடப்பட்டது. அவ்விதம் செய்தது புத்திசாலித்தனமானதல்லன இப்போது உணரப்படுகிறது

——

## ஓ'பிரியனுக்கு திருமணம்

நியுயோர்க், ஜன. 10
கடாங்காவில் முன்பு ஐ. நாவின் பிரதம அதிகாரியாக இருந்த திரு. 'பிரியன் அயர்லாந்து உதவிப் பிரதமரின் புதல்வி செல்வி மேரிமெககண்டீயை' மணந்தார். திரு. ஓபிரியனுககு இது இரண்டாவது விவாகமாகும்.

# உங்கள் இராசி பலன்

ஜோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

பிலவ ஆண்டு தைத் திங்கள் 1-ந் திகதி முதல் 7-ந் திகதி வரை
( 1962 ஜனவரி 14 முதல்20 வரை ) உள்ள பலன்கள்

## மேட இராசி

(அசுவதி, பரணி, கார்த்திகை முதற்பாதம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் தொழில்வகையில் முன்னேற்றமும் அதிகாரிகள் ஆதரவும், பண வரவும் குடும்ப ஒற்றுமையும் புண்ணிய தலங்களுக்கு யாத்திரை தரிசனங்களும் பணச் செலவும் காணப்படுகின்றன. உத்தியோகத்திலிருப்பவர்களுக்கு கடும் உழைப்பும் தொழில் நிலையத்தில் பகையும் எதிர்ப்பும் காணப்படும். கமத் தொழிலாளருக்கு நன்மையுண்டு. வர்த்தகர்களுக்கு வருமானம் அதிகரிக்கும். கல்வி பயில்வோருக்கு ஊக்கமும் முயற்சிகளில் வெற்றியும் அரசாங்க ஆதரவும் இருக்கும். பெண்களுக்கு தாய் வழி உறவில் ஆதரவும் கணவர் குழந்தைகளுக்கு நற்பலனும் காணப்படுகின்றன. இவர்களுக்கு 1,2,6ந் தேதிகள் சுபநாட்களாகும்.

★

## இடபஇராசி

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை முடிய)

இவ்விராசியாளருக்கு பிதா வழி ஆதரவும் குடும்ப சுகமும் தொழிற் சித்தியும் தார்மீக சிந்தனையும் வெளிப் பிரயாணங்களால் கஷ்டமும் நஷ்டமும் அதிக உழைப்பும் காணப்படுகிறன. உத்தியோகத்துறையிலிருப்பவருக்கு மேலதிகாரிகள் பகையிருக்கும். ஆயினும் தொழிலில் மேன்மை காணப்படுகிறது. சமதொழிலாளருக்கு கடும் உழைப்பு, தாயாதிகள் கரைச்சல் ஆதியன காணப்படும். கல்வி பயில்வோருக்கு கல்வி அபிவிருத்தியுண்டு. வர்த்தகருக்கு வியாபார அபிவிருத்தியும் புதியனவற்றில் வெற்றியும் ஊழியரால் இலாபமும் காணப்படுகின்றன. பெண்களுக்கு பிதா வழி ஆதரவும் குடும்ப நன்மைகளும் காணப்படும். இவர்களுக்கு 3,4ந் தேதிகள் சுபநாட்களாகும்.

★

## மிதுன இராசி

(மிருகசீரிடம், பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன் முக்கால் முடிய)

இவ்விராசியாளருக்கு குடும்ப நலக்குறைவுகள், வைத்தியச் செலவுகள், இனசன தொல்லைகள், வம்பு வழக்குகள், அகலா போசனம், சுகயீனம், பணக் கஷ்டம், ஆதியன காணப்படும். உத்தியோகத்திலிருப்பவருக்கு வருத்தங்காரணமாக அடிக்கடி கஷ்டங்கள் விளையும். கல்வி பயில்வோருக்கு கல்வியில் ஊக்கம் குன்றுவதுடன் சுகயீனமும் இவர்களைப் பாதிக்கும். கமத் தொழிலாளருக்கு சொத்து வழக்குகள் காரணமாக கமத தொழில் வேலைகள் பாதிக்கப்படும். இடையிடை வருத்தம் தோன்றும். வர்த்தகர்களுக்கு வருமானம் குறைந்து பணக் கஷ்டமும் கடன் சிலவும் ஏற்படும். பெண்களுக்கு வருத்த நிலைமை காணப்படுகிறது. இவர்களுக்கு 2,6ந் தேதிகள் சுபநாட்களாகும்.

★

## கடக இராசி

(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம் முடிய)

இவ்விராசியாளருக்கு குடும்பக் கவலைகளும் பணக் கஷ்டமும் பெண்களால் கலகமும் அகால போசனமும் சுகயீனமும் காணப்படும். பொதுவாக நற்பலன் மிகவும் குறைவு மாணவருக்கு கல்வி மேன்மையும் பரீட்சைகளில் வெற்றியுமுண்டு. உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு தொழில் தாமதமும் மேலுத்தியோகத்தருக்கு மனவருத்தமும் மறைமுகமான எதிரிகளால் துன்பமும் காணப்படுகின்றன. வர்த்தகருக்கு தொழில்கள் சீராக நடப்பதுடன் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கும். கமத் தொழிலாளருக்கு குடும்ப சச்சரவு. பயிர்த் தொழில் கணக்கம், கால்நடைகளால் கஷ்டம் ஆதியன காணப்படுகின்றன. பெண்களுக்கு குடும்ப சுகக் குறைவும் தேகாரோக்கியம் குன்றுதலும் உண்டு. இவர்களுக்கு 1,3,4,7ந் தேதிகள் சுபநாட்களாகும்.

★

## சிங்க இராசி

(மகம், பூரம். உத்திரம் முதலாம்பாதம் முடிய.)

இவ்விராசியாளருக்கு தெளிவான மனநிலைமையும் எதிலும் சாதகமான சூழ்நிலைமையும் காணப்படும். பணக்கஷ்டமும் உடன் தொல்லைகளும் சிறிது தறையும். குடும்பத்தில் இடைக்கிடை ரோகம் இருக்கலாம். கமத் தொழிலாளருக்கு ஆதாயமுண்டு. கல்வி பயில்வோருக்கு கல்வியில் ஊக்கம் குறைவதுடன் பெரியோர் அதிருப்தியையும் தேடிக் கொள்ள நேரும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்குச் செய் தொழிலில் செலவாக்கும் வசதியான இடமாற்றம் முதலியனவும் காணப்படுகின்றன. வர்த்தகருக்கு தொழிலில் வருமானமுண்டாயினும் போட்டியிருக்கும். பெண்களுக்கு முற்பகுதியில் நற்பலனும் பிற்பகுதியில் தீப்பலனும் காணப்படுகிறது. இவர்களுக்கு 2,3, 7ந் தேதிகள் சுபநாட்களாகும்.

★

## கன்னி இராசி

(உத்திரம் பின்முக்கால், அத்தம்,சித்திரைமுன்னரைமுடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் பெரியோர் நட்பும் அதனுல் நன்மைகளும், இலாபம் வரக்கூடிய முயற்சிகளில் ஊக்கமும் தெய்வ வழிபாடும் கடுமையான உழைப்பும் காணப்படுகின்றது. உத்தியோகத்திலிருப்போருக்கு சஞ்சல நிலைமையே இருக்கும் சிறிது கவனமாக நடப்பது நன்மை. கமத்தொழிலிலீடுபட்டுள்ளோருக்கு வெளிப் பிரயாணங்கள் அடிக்கடி நேரும் அதனுல் செய்தொழில் குன்றும். வர்த்தகருக்கு தொழில்கள் அபிவிருத்தியாகவும் இலாபகரமாகவும் நடக்கும். கல்வி கற்போருக்கு கல்வி விருத்தியுறும். பலரது உதவிகள் கிடைப்பதும் காணப்படுகின்றது. பெண்களுக்கு தாய் வழி ஆதரவும் மனச் சந்தோஷம், நன்மைகள் நடத்தல் ஆதியனவும் இருக்கும். இவர்களுக்கு 5,7ந் தேதிகள் சுபநாட்களாகும்.

★

## துலா இராசி

(சித்திரை பின்னரை,சுவாதி விசாகம் முன் முக்கால் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ் வாரம் எந்தக் கருமத்தையும் நிதானமாகச் செய்தல் வேண்டும். பணச் செலவும் குடும்பக் கஷ்டங்களும் எதிர்ப்புகளும் காணப்படுகின்றன. வீண் விரோதங்கள் ஏற்படுவதும் வழக்கு முதலியனவும் இருக்கலாம். கல்வி பயில்வோருக்கு அபிவிருத்தியும் புத்திசாதுரியமும் வெற்றியும் காணப்படுகின்றன. கமத்தொழிலாளருக்கு கால்நடை அபிவிருத்தி மந்தப்படும்; வருவாய் குறையும். வர்த்தகருக்கு வருமானம் விருத்தியாகும். உத்தியோகத்திலிருப்பவருக்கு கடும் உழைப்பும் அடிக்கடி கஷ்டமான பிரயாணங்களும் இருக்கும். பெண்களுக்கு சந்தோஷமான வாழ்க்கை அமையும் இவர்களுக்கு 1ந் தேதிதான சுபநாளாகும். இதர பலன்கள் விசேடமாகச் சொல்லப்படமுடியாது.

★

## விருச்சிக இராசி

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் குடும்ப ஒற்றுமையும் சமூகத்தில் மதிப்பும் செல்வாக்குக் கூடுதலும் தொழில் வகையில் முன்னேற்றமும் சொத்துக்கள் வகையில் நன்மையும் தேவாலய தரிசனங்களும் காணப்படுகின்றன. கல்வி பயிலும் மாணவருக்கு கல்வியில் ஊக்கம் இருக்காது. கமத்தொழிலாளருக்கு குடும்ப அமைதி குன்றும்; பிற்பகுதியில் நன்மையான பலன்கள் இருக்கும். உத்தியோகத்தருக்கு தொழிலில் உற்சாகம், மேலோர் பாராட்டு, பூதான வெற்றி ஆகியன காணப்படுகின்றன. பெண்களுக்கு நற்பலன்களுண்டு. வர்த்தகருக்கு அதிருப்தியான நிலைமையே காணப்படும். இவர்களுக்கு 1, 3, 4ந் தேதிகள் நற்பலன் தருவன.

★

## தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் முதலாம பாதம் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் அவசரப் பேச்சுக்களைக் குறைத்து நிதானமாக நடப்பது விசேடமாகும். உடல் நலங்கள் பாதிக்கப்படும். ஆதாயமிருக்கும் நேரத்தில் ஆடம்பரச் செலவுகளும்வரும். நற்பலனும் தீயபலனும் கலந்து காணபபடும். மாணவருக்கு வாக்கு வன்மையும் கல்வி விருத்தியுமுண்டு. உத்தியோகத்தருக்கு நிதானம் வேண்டும். மேலோர் அதிருப்தியை தேட வேண்டும். வர்த்தகருக்கு தொழில் முன்னேற்றத்துடன் வருமானமும் அதிகரிக்கும். கமத்தொழிலாளருக்கு குடும்ப சச்சரவுகள் காணப்படுகின்றன; வருவாய் குறையும். பெண்களுக்கு குடும்ப சௌகரியங்கள் காணப்படுகின்றன. இவர்களுக்கு 3, 4, 7ந் தேதிகள் சுபநாட்களாகும்.

★

## மகர இராசி

(உத்தராடம் பின்முக்கால் திருவோணம், அவிட்டம் முன்னரை முடிய)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் நோய்வந்து நீங்குதலும், வீண் மனப்பிராந்திகளேற்படலும் குடும்பத்தில் பணச்செலவுகளதிகரித்தலும் களத்திர வழி கண்டங்களும் பிரயாணக் கஷ்டங்களும் தொழிலில் ஓரளவு சௌகரியங்களும் இருக்கும். உத்தியோகத்திலிருப்போருக்கு தொழில் நிலையங்களில் பகை வளரும்; உழைப்புக் கஷ்டமாகும். மாணவருக்கு கல்வி மேன்மை காணப்படுகின்றது. பரீட்சைகளில் வெற்றியும் இருக்கும். வர்த்தகருக்கு கௌரவங்களும் வருமானமும் கூடுதலாக இருக்கும். கமதொழிலாளருக்கு பயிர்த் தொழில் வருவாய் குறைவதுடன் தாயாதிகள் இடர் விளைத்தலும் காணப்படுகின்றது. பெண்களுக்கு குழந்தைகள்மூலம் நன்மையும் துணைவருக்கு ஆலோசனைகூறி சம்பாதிக்க வழி காட்டல் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு 5, 7ந் தேதிகள் சுபநாட்களாகும்.

★

## கும்பராசி

(அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் கடன்கஷ்டங்களும் சமூகத்தில் மதிப்புக்குன்றுதலும் தொழில்வகையில் கஷ்டமும் வருமானம் குறைத

(7ம் பக்கம் பார்க்க)


# செயில் பிருண்ட்

சாதாரண போட்லண்ட் சிமேந்து

போலந்தில் தயார் செய்யப்பெற்று

கூ. மொ. வி. தாபனத்தாரால் இறக்குமதி செய்யப்படுவது.

போலந்து போட்லண்ட் சிமேந்து உலகப் பிரசித்தி பெற்ற திறம் சிமேந்து உயர்ந்த தரமுடைய மூலப்பொருள்களைக் கொண்டு செய்யப்படுவதாலேயே இந்தசிமேந்து உலகத்திலேயே முதல் தரமுடையதாக விருக்கின்றது. அத்தோடு பல வருட அனுபவமுடையவர்கள் உற்பத்தி செய்வதால் சிறந்த முறையில் இது தயார்செய்யப்படுகிறது

கொங்கிறீட் கல்லு அரிவதற்கும், சிமேந்துக் காரைக்கும் போட்லண்ட் சிமேந்து உகந்தது.




## செயில் பிருண்ட்

போட்லண்ட் சிமேந்து பி. பி. எஸ். 12/1958 தரத்தை ஒத்திருக்கிறது. ஆறு அடுக்குப் பேப்பர் பக்கட்டுகளில் 'பாக்' செய்யப்பெற்றுள்ளது.

முன்னதாகவே ஸ்டாக்குகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:

மனேஜர்,
கூ. மொ. வி. தா. கடினப் பொருள்கள் இலாகா,
நம். 11, ரேஸ்மீட் பிளேஸ்,
கொழும்பு-7,
போன்: 91226

கூ. மொ. வி. தா.
கடினப்பொருள் கடை
தேசிய வீடமைப்பு பிளாட்ஸ்,
ஆர்மர் வீதி.

கூ. மொ. வி. தா. விநியோகஸ்டோர்,
நம். 40, மக்கலம் வீதி,
கொழும்பு-10.

இப்போதும் எப்போதும் ஞாபகத்தில் வைத்திருங்கள்! கூ. மொ.வி. தாபனம் திறமைமிக்க பொருள்களையே உங்களுக்கு விநியோகிக்கிறது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

வெள்ளி 12—1—62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 7-45 வி. செல்லத்துரை-பக்திப் பாடல்கள் 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்தின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை.

இரவு 7-00 ஞானாஞ்சலி, 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு — விமர்சனங்கள் 9-30 பகவதி கமலா— பாட்டு, 10-15தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 வி. மீனாட்சிசுந்தரம்பிள்ளை - நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 காந்தி கதை, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 டி. பிருந்தா, டி. முக்தா - பாட்டு, 9-15 பலசுணி, 9-30 புதுமலர், 9-45 இசைமாலை.

## சாவிலும் பிரியாத தம்பதிகள்

யாழ்ப்பாணம், புதன்

வயது முதிர்ந்த கணவனும் மனைவியும் ஒருசில மணிநேர இடைவேளையில் ஒருவரைத் தொடர்ந்து மற்றவர் இவ்வுலகைவிட்டுப் பிரிந்த சம்பவமொன்று நேற்று வேலணையில் நடைபெற்றுள்ளது.

வேலணை கிழக்கைச் சேர்ந்த இராமலிங்கம்பிள்ளை என்ற 70 வயது முதியவர்நேற்று நண்பகல் மாரடைப்பால் மரணமானார். கணவனது மரணத்தால் கவலை தோய்ந்திருந்த அந்த 60 வயது மூதாட்டியும் அன்று மாலையே மரணமானார்.

## ஆண்டுவிழாவில் இசை விருந்து

ஊர்காவற்றுறை, வியாழன்

தைப்பொங்கல் தினத்தன்று நடைபெறவிருக்கும் சரவணை சனசமூக நிலையத்தின் 15-வது ஆண்டு விழாவின்போது இசை விருந்து ஒன்று நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## தேசிய சேவையின் முக்கியத்துவம்

### சாவகச்சேரி எம். பி. பேச்சு

சாவகச்சேரி, வியாழன்

"அரசாங்கக் கடமையென மதியாது எமது குறைகளை நாமே நிவிர்த்தி செய்கிறோம் எனக் கருதி எமது பிள்ளைகளைத் தேசிய சேவையில் ஈடுபடத் தூண்ட வேண்டும். தொடக்கத்தில் பிள்ளைகளுக்குக் கசப்பாகவும் வெறுப்பாகவும் இருந்தாலும், பெற்றோரும் ஆசிரியர்களும் தேசிய சேவை எமது குறைகளை நிவிர்த்திக்கச் செய்யும் சேவையென விளங்கப்படுத்த வேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரிப் பகுதி தேசிய சேவை கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி என். நவரத்தினம் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு சாவகச்சேரி வட்டார வித்தியாதரிசி திரு வி. நடராசா தலைமை வகித்தார்.

திரு. நவரத்தினம் மேலும் பேசியதாவது:-

எங்களைச் சூழ்ந்தகொண்டு பொருளாதாரபிரச்னை இருக்கிறது. நாம் கற்றகல்வியைப் பயன்படுத்திப் பொருளாதாரப் பிரச்னையை நீக்கத் தேசிய சேவையைக் கைக்கொள்ள வேண்டும்.

இப்போதே நீர் வடிவாய்க்கால்களைத் தேசிய சேவையில் ஈடுபட்டிருக்கும்மாணவர்களைக் கொண்டு வெட்டுவித்து வைத்திருப்பது, 'வெள்ளம் வருமுன் அணைகோலி வைப்பதையொக்கும்.'

## வாழ்க்கை கசந்ததால் வாலிபன் தற்கொலை

கொச்சிக்கடை, வியாழன்

"சில வருடங்களுக்கு முன்னரே நான் தற்கொலை செய்வதற்குத் துணிந்திருந்தேன். ஆனால் எனது குடும்பத்தையும் எனது இனத்தவர்களையும் பற்றி நான் சிந்தித்தபோது, அந்த எண்ணம் என்மனதைவிட்டே மறைந்துவிட்டது ஆனால் இப்படி எவ்வளவு காலம் நான் இருக்க முடியும். வாழ்க்கையில் மேலும் மேலும் துன்பப்படமுடியாது என்ற நிலையில், நான் தற்கொலை செய்ய முடிவு செய்துவிட்டேன்."

ருகலை பொலிஸ் பகுதியைச் சேர்ந்த பனத்தல் என்ற இடத்தில் வசிக்கும் 18 வயதுள்ள மலவல ஹெரத் முடியன்சிலகே கோவிலன் கெதர குணவர்த்தன என்பவர் துப்பாக்கியினால் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொள்ள முன்னர், எழுதியிருந்த ஒரு கடிதத்தில் தான் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இறந்தவரின் உடலுக்கருகில் ஒரு துப்பாக்கியும், இரண்டு வெற்று தோட்டாக்களும் இருக்கக்காணப்பட்டன. திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு டபிள்யு. அண்றா பெர்னாண்டோ மரண விசாரணை நடத்தியபின், தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## யாழ்ப்பாணத்தில் தமிழ்க் காங்கிரஸ் மகாநாடு

ஊர்காவற்றுறை, புதன்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் விசேட 'மகாநாடு' ஒன்று இம்மாதம் 20-ந் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

அகில இலங்கையிலும் உள்ள காங்கிரஸ் கட்சி அங்கத்தவர்களைப் பிரதிநிதிகளாகக் கொண்டு சியப்பானமுறையில் நடைபெறவிருக்கும் இம் மகாநாட்டில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கலந்துகொள்வார்.

மகாநாட்டைத் தொடர்ந்து பாராளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் கிளை ஸ்தாபனங்கள் புனருத்தாரணம் செய்யப்படுமெனவும் தெரியவருகிறது.

## விவசாயிகள் கோரிக்கை

தண்ணீரூற்று, வியாழன்

"கடந்த பல வருடங்களாக நாங்கள் கீச்சிக்குளத்தின் கீழ் கமஞ்செய்து வருகின்றோம். ஆனால் திருத்தமான முறையில் துழாய்கள் அமைக்கப்படாததால், வருடாவருடம் எமது வேளாண்மை நீரின்றிச் சாக வேண்டியிருக்கிறது. அதைப் பார்வையிட்டு, வேண்டிய நடவடிக்கை எடுக்கும்படிகேட்டுக் கொள்கிறோம்."

கீச்சிக்குளம் விவசாயிகள் கோஷ்டி ஒன்று வவனியாப் பிரதிநிதி திரு தா. சிவசிதம்பரத்தைச் சந்தித்து, மேற்கண்டவாறு தமது குறைகளை முறையிட்டது.

மிகவிரைவில் அதற்குரிய நடவடிக்கை எடுப்பதாக, வவனியாப்பிரதிநிதி வாக்களித்ததாகத் தெரியவருகிறது.

## உங்கள் இராசிபலன்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

லும், அலைச்சல், போசன கஷ்டங்கள், குடும்ப மதயீனம், வைத்தியச் செலவு ஆகியன காணப்படுகின்றன. உத்தியோகத்திலிருப்பவர்க்கு அதிக பொறுப்புக்களேற்படுவதுடன் உழைப்பும் கடினமாகும். மேலுத்தியோகத்தரைத் திருப்திசெய்யமுடியாது. மாணவருக்கு பணக்கஷ்டமும் பலவித இடர்களும் ஏற்பட்டு கல்வியைத் தடைசெய்யும். வர்த்தகருக்குப் போட்டிகளும் வருவாய் குன்றுதலும் கடன் தொல்லைகளும் இருக்கும். கமத்தொழிலாளருக்கு முற்பகுதியில் மந்த நிலைமையும் பிற்பகுதியில் அபிவிருத்தியும் இருக்கும். பெண்களுக்கு சுபபலன்களுண்டு; குடும்பத்திற்கு நன்மை. இவர்களுக்கு 2ந்தேதி மட்டுமே சுபகாலமாக இருக்கும்.

★

### மீன இராசி

(பூரட்டாதி 4ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் கடன் கஷ்டங்கள் நீங்கி சந்தோஷமும் பிரயாணங்களால் நன்மையும் தொழில்களில் ஆதாயமும் பணம் வீடு, காணி, சொத்துக்கள் சேர்வதும் காணப்படுகிறது. உத்தியோகத்தருக்கு நற்பெயர், பதவியுமர்ச்சி, வருவாய், புதியன வெற்றிதரும். கமத்தொழிலாளருக்கு நற்பலன்களும், பூமி கொள்வனவுக்கான பேசுக்களும் நடக்கும். வர்த்தகருக்கு மதிப்புயருவதுடன் வருவாயும் கூடும்; பலவழிகளிலும் ஆதாயம்வரும். மாணவருக்கு கல்வி மேன்மை, பரீட்சைகளில் வெற்றி, அரசாங்க உதவி காணப்படுகின்றது. பெண்களுக்கு இனசன உதவி, குடும்ப சந்தோஷமுண்டு. இவர்களுக்கு 2, 4ந் தேதிகள் சுபநாட்களாகும்.


பாலகனுக்கு எவ்வளவு காலம்தான் நீங்கள் வெறும் பாலை மட்டும் ஊட்டிவளர்க்கமுடியும்?

**பார்லீஸ்**

**கனிப் பொருள்களும் விட்டமின்களும் கலந்த தொரு தனி உணவாகும்—மிக மென்மையான ஜீரணத்திற்குக் கூட உகந்ததொரு சமதை உணவு.**

குழந்தை மூன்று, நான்கு மாதங்களானதும், முன்பைப்போல் வெறும் பாலை மட்டும் ஊட்டிப் பெற்ற அதே திடவிருத்தியையோ வளர்ச்சியையோ காணுமை கண்டு நீங்கள் அதிருப்தியடைவீர்கள்.

பாலோடு வேறு உணவையும் குழந்தைக்கு ஊட்டுவதற்கு ஏற்ற காலம் இதுவே. ஆனால் அச்சமயத்தில் ஓர் ஒழுங்கு முறையை மேற்கொள்ள வேண்டும். பாலோடு சேர்த்துக் கொடுக்கக் கூடிய முதல் கட்டி உணவு பார்லீஸ் சிசு போஷப்பு ரஸ்குகளே என்பதை தலைமுறை தலைமுறையாக தாய்மார் நன்கு அறிவர்.

FARLEY'S RUSKS
Baby's First Solid Food.






பார்லீஸ் ரஸ்க் உணவைத் தயாரிப்பது மிகச் சுலபம் சூடான பாலைச் சேர்த்துக் கொண்டால் போதும்

# தடிகொண்டு கனிய வைக்க விரும்பியவர்!

## ரிமாண்டில் வைக்கப்பட்டார் ஆசிரியையின் சாதுரியம்

மாவிட்டபுரம், வியாழன்

சங்கானைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த பிராம்பத்தையிலுள்ள அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றும் புண்ணியமூர்த்தி அருந்தவம் என்பவரை அவரது சொந்த மைத்துனரான பி. தங்கராசா என்பவர் பலாத்காரமாக காரில் இழுத்துச் சென்று தம்மை மணம் புரியுமாறு வற்புறுத்தியதாகப் பொலிசில்புகார் செய்யப்பட்டுள்ளது. ஆனல் அருந்தவம் சமயோசித புத்தியை உபயோகித்து அவரிடமிருந்து தப்பியதுமல்லாமல் அவரை ரிமாண்டில் வைக்குமாறு செய்துவிட்டார்.

நேற்றுக் காலை 8-30 மணியளவில் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த அருந்தவத்தை பி. தங்கராசா மோட்டார் கார் ஒன்றினுள் பலாத்காரமாக ஏற்றி மாதகலுக்குக் கூட்டிச் சென்ருராம். அங்கு ஆசிரியையிடம் தன்னை மணக்க சம்மதிப்பதாக எழுத்துமூலம் சம்மதம் பெற்றுக் கொண்டு தற்காலிகமாக ஒரு வீட்டில் தங்குவதற்கு ஏற்பாடும் செய்தாராம்.

ஆனல் ஆசிரியை தாம் ஏன் வேருெரு வீட்டில் ஒழித்திருக்க வேண்டும் என்றும் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தாம் கணவன் மனைவியாக வாழச் சம்மதித்துள்ளதாக அறிவித்துவிட்டு பின் ஊர்உலகம் அறியும்படி தம்பதிகளாக வாழலாம் எனக் கூறினர்.

தங்கராசா அவ்வாறே ஆசிரியையை காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்ருராம்.

அங்கு ஆசிரியை அருந்தவம், தங்கராசா தம்மைப் பலாத்காரமாக அழைத்து வந்ததாகப் புகார் செய்யவே பொலிசார் தங்கராசாவைக் கைது செய்து சங்கானைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சங்கானைப் பொலிஸார் தங்கராசாவை இன்று மல்லாகம் நீதிபதி முன் ஆஜர் செய்தபோது நீதிபதி தங்கராசாவை இம்மாதம் 15-ந் திகதிவரை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

---

## நல்லூர் எம். பி. . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற கஷ்டங்கள் எழக்கூடுமென்றும் கூறினர்.

காலி எம். பி. தகநாயக்கா பேசுகையில் அந்தஸ்தை உயர்த்தும் நோக்கத்துடன் ஒரு கிராமசபையைக் கலைக்க உத்தேசிப்பதை மந்திரி பார்லிமெண்டுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று ஒரு ஷரத்து ஏன் சேர்க்கப்படவில்லையென்று கேட்டார்.

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன திருத்தப் பிரேரணையை ஆதரித்துப் பேசுகையில் கிராமசபையொன்றை மந்திரி காலவரையின்றி இயங்காமல் வைத்திருக்க அனுமதிக்கக் கூடாதென்ருர்,

"ஜனநாயகமற்ற முறையில் சட்டத்தை நிறைவேற்றுகிருர்களென்பதையும் எதிர்க்கட்சியினரின் கருத்தைக் கேட்பதற்கு மந்திரிகள் இங்கு இல்லாமலிருப்பதையும் பார்ப்பதற்கு பிரதமமந்திரி இச்சபையிலில்லாதது வருந்துவதற்குரியது" என்று திரு. ஜயவர்த்தன கூறினர்.

டாக்டர் நாகநாதனின் திருத்தப் பிரேரணை நிராகரிக்கப்பட்டது.

---

## இலங்கையில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தற்காக இதற்குத் தேவையான கருவிகளை இலங்கைப் பல்கலைக் கழகத்துக்கு தந்துதவும் படி சர்வதேச அணுசக்தி ஏஜன்ஸியை இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது.

திரு. ஜெயவிக்கிரமா: வெளிநாடுகளிலிருந்து இந்தியா வரும் பறவைகள் கதிரியக்கத்தினுல் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இந்தப் பறவைகளை உண்ண வேண்டாமென்றும் அணுசக்தி ஆராய்வுக் கமிஷனின் அறிக்கை அகில இந்திய வானெலி மூலம் தொடர்ந்து ஒலிபரப்பப்பட்டு வருவதையும் இங்கு இது சம்பந்தமாக ஒரு சஞ்சிகையாவது வெளியிடப்பட வில்லை என்பது பற்றி கல்வி உதவி மந்திரி அறிவாரா?

உதவி மந்திரி: நாம் இது சம்பந்தமாக பரிசோதனை நடத்துவதற்கு போதிய கருவிகள் அனுப்புமாறு கோரியுள்ளோம். அக் கருவிகள் வரும் வரை நாம் இந்தப் பரிசோதனையைத் துரிதப்படுத்தமுடியாது.

திரு. ஜெயவிக்கிரமா: அப்படியெனில் மிகவும் தாமதமாகிவிடும்.

உதவி மந்திரி: தகுந்த கருவிகள் இல்லாமல் நாம் பரிசோதனை செய்ய முடியாது.

திரு. ஜெயவிக்கிரமா: காய்கறிகளிலும் மீனினங்களிலும் பால் முதலியவைகளிலும் கதிரியக்கம் பரவலாம் என்னும் பீதி இங்கு இருக்கிறது. இந்தியாவிலுள்ள அணுசக்தி கமிஷனுடன் இது சம்பந்தமாக உதவி மந்திரி உடனே தொடர்பு கொள்ளவேண்டும்.

---

துறைமுக வேலை நிறுத்தம்

# திரு. சில்வாவின் யோசனை; தொழிற்சங்கங்கள் ஆராயும்

கொழும்பு, வியாழன்

28 தினங்களாக நடைபெற்று வரும் கொழும்பு துறைமுக வேலை நிறுத்தத்தை தொழில் அமைச்சருடன் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்குக் கொண்டு வர முயற்சி செய்யுமாறு சபை முதல்வர் திரு. சி. பி. டி' சில்வா சமீபத்தில் விடுத்த கோரிக்கை பற்றி தொழிற் சங்கங்கள் கூடி ஆராயும் என்று கம்யூனிஸ் கட்சித் தலைவர் திரு. பீட்டர்கெனமன் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையின் மூலம் வேலைநிறுத்தத்துக்குத் தீர்வு காண்பதற் குரியதொரு நல்ல சூழ்நிலையை திரு. சில்வாவின் அறிக்கை நிச்சயமாக ஏற்படுத்தியுள்ளதென்று திரு. சில்வாவின் அறிக்கை நிச்சயமாக ஏற்படுத்தியுள்ளதென்று திரு. கெனமன் கூறினர்.

டாக்டர் என்.எம். பெரேரா அபிப்பிராயம் தெரிவிக்கையில் உண்மையிலேயே வேலைநிறுத்தத்தை சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்று அரசாங்கம் விரும்பினல் நிச்சயமாகச் செய்திருக்கலாமென்ருர்.

---


### விற்பனைக்கு

நல்லநிலைமையிலுள்ள "றெமிங்ரன்" ரைப்றைரெர் விற்பனைக்குண்டு. P பெரியதம்பி, கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய் அல்லது காளுவன், சுழிபுரம்.


### தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் **வெலிங்டன்:** சிவாஜிகணேசன் - ஜெமினி கணேசன் நடித்த **பாச மலர்**

யாழ்ப்பாணம் **மனேகரா** சிவாஜி கணேசன் - ஜெமினி கணேசன் நடித்த **பாச மலர்.**

சாவகச்சேரி **தேவேந்திரா:** சிவாஜி கணேசன், பி சரோஜா தேவி நடித்த **விடிவெள்ளி.**

---

# உதவிமேயர்....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

திரு. ஏ. ஜீ. இராஜசூரியர் பேசும்பொழுது திரு. துரைராஜசிங்கத்தின் தன்னலமற்ற சேவைக்கு நன்றியறிதலாகவே இம்முக்கிய பதவிக்குத் தெரியப்பட்டார் என்ருர். கவுன்சில் விவகாரங்களைக் கவனிக்கக்கூடிய ஆற்றலிருந்தும் சட்டப்படி அவர் கவனிக்க இடமில்லாதது வருந்தத்தக்கதென்றும் அரசாங்கம் கவுன்சிலின் உதவிமேயருக்கும் சில அதிகாரங்களை வழங்க முன்வர வேண்டுமென்றும் கூறினர்.

### இந்த ஒற்றுமைதான் தேவை

டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் பேசும்போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

மாநகரசபையின் தற்போதைய நிலை திருப்திகரமானதென்று சொல்ல முடியாது. மாநகரசபையின் தற்போதைய தேவை ஒருமித்த சேவையே பொதுமக்களின் பணத்தையே நாம் செலவு செய்கிறேம். அவர்கள் எமக்கு அளித்த பொறுப்பைச் சரிவரச் செய்ய வேண்டும்.

வீதிகள், சுகாதார வசதிகள் ஆதியன அவசியம் கவனிக்க வேண்டியன. ஆகவே உதவி மேயர் தெரிவில் இருந்த ஒற்றுமை மாநகரசபையின் விருத்திக்குமிருக்கும் என நம்புகிறேன்.

ஹாஜி வி. எம். எம். அபுசாலி பேசும்போது இக்காலத்தின் நிகழ்ச்சிகளுக்கமையத் தொழிலாளரின் உண்மையான பிரதிநிதி உதவிமேயராகத் தெரிவு செய்யப்பட்டது பாராட்டுக்குரியது என்ருர்.

திரு. என். தேவபாலசுந்தரம் பேசும்பொழுது முதலாளித்துவக் கட்சியிலுள்ளவர்கள் தொழிலாளர்களிடம் சரண்புகுந்து ஓர் தொழிலாளிப் பிரதிநிதியைத் தெரிவு செய்தது பெருமைக்குரிய விஷயமாகும் என்ருர்.

திரு. கே. எஸ். நடராசா பின்வருமாறு குறிப்பிட்டார்:

திரு. துரைராஜசிங்கம் 12 வருடகாலம் மாநகரசபையின் அங்கத்தவராகவிருந்து சேவை புரிந்து இச்சபையின் ஜீவநாடியாக விளங்கினரென்ருல் மிகையாகாது.

திரு. எஸ். இராசரத்தினம் பின்வருமாறு கூறினர்.

### ஒப்பந்தம் கூடாது

ஒப்பந்தங்கள் ஒரு சில அங்கத்தவர்களுக்குள்ளிருக்குமானல் கவுன்ஸிலின் நிர்வாகத்தையே சிதைத்துவிடும். இத்தேர்தலுடன் ஒப்பந்தம் முறிவுற்றது நன்மைக்கே. இன்று முதல் இச்சபை புத்துயிர் பெற்று விளங்கி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அக்கறை செலுத்துமென நம்புகிறேன்.

திரு. ஜே. எஸ். அழகையா பேசும்பொழுது மாநகரசபை அங்கத்தவர் பொறுப்பு வாய்ந்தவர்களாகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமுடையவர்களாகவும் இருக்கவேண்டுமெனக் குறிப்பிட்டார்.

### வாக்குறுதியை காப்பாற்ருதவர்கள்

திரு. அழகையா மேலும் குறிப்பிட்டதாவது:-

நகரபிதாக்களெனப்படுவோர் தாம் கொடுத்த வாக்குறுதிகளைப் பாதுகாத்துச் சபையின் தூயமையை நிலைநாட்ட வேண்டும். அவ்விதம் தமது வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாதவரை வாக்காளர் எதிர்காலங்களில் தெரிவு செய்யாது விடுதலே சிறப்பு.

முன்னைநாள் உதவி மேயர் திரு. என். ரி. செல்லத்துரை பேசும்பொழுது சென்ற வருட ஒப்பந்தப்படி தாம் 31-ந் திகதி உதவி மேயர் பதவியிலிருந்து இராஜினமாச் செய்ததாகவும் சென்ற வருட ஒப்பந்தப்படி உதவி மேயர் தெரிவு நடைபெருதது வருந்தத்தக்கதென்றும் கூறினர்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

அந்த ஒப்பந்தத்தைப் பலப்படுத்துவதற்கு திரு. அழகையா தமது ஆசிரியர் பதவியையே இராஜினமாச் செய்திருந்தார். ஆனல் அதை நிலைநாட்ட முடியாது போனது கவலைப்பட வேண்டியதொன்றே.

திருவாளர்கள் பி. எஸ். சோமசுந்தரம், பி. எம். யோன் ஆகியோரும் பேசினர்.

திரு. பி. எம். யோன் பாராட்டுரை வழங்குகையில் பின் கண்டவாறு சொன்னர்:-

1961-ம் ஆண்டு ஜனவரி 6-ம் திகதி இச்சபையின் பெரும்பான்மை அங்கத்தவர்கள் ஒன்று கூடி மேயர் உதவி மேயர் பதவிகள் சம்பந்தமாக ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கினேம். அதன்படி திரு. அ. நடராசாவே இன்று உதவி மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனல் அவரே முந்திக்கொண்டு எங்கள் கோஷ்டியைச் சேராத திரு. துரைராசசிங்கத்தை பிரேரித்தது மூலம் குறித்த ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டுவிட்டதென்பது இதிலிருந்து புலனுகின்றது. ஆயினும் அந்த ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டு இன்றும் இருப்பவர்களாகிய நாம் இனிமேலும் இருந்து வருவோம்.

காதி எம். எம். சுல்தான் தவிர ஏனைய அங்கத்தவர்கள் பிரசன்னமாயிருந்தனர்.

கூட்டம் முடிவடைந்ததும் திரு. துரைராசசிங்கத்தை மேயரும் மற்றும் அங்கத்தவர்கள் சகிதமாக மேளதாளத்துடன் வாடிவீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு ஓர் சிற்றுண்டி விருந்து நடைபெற்றது.

---


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி பிளாஸா நவா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொம்பனித்தெரு)

வெம்பிளி விஜயா
(கண்டி) (மட்டக்களப்பு)

வெலிங்டன் - மனேகரா
(யாழ்ப்பாணம்)

மற்றும் ஐந்து திரைகளில்

★ அன்பிற்கு இரண்டு உள்ளங்கள். அண்ணன் தங்கை என்ற நெஞ்சங்கள்....

★ மலர்களைப்போல் உறங்குகிருள் தங்கை அவளை வாழ வைக்கக் கனவு காண்கிருன் அண்ணன்....

★ இருவரும் நண்பர்கள். ஆனுல் எதிரிகளாக நிற்கிருர்கள். ஒரு பக்கம் அண்ணன். மறு பக்கம் கணவன். அவள் யார் பக்கம் நிற்கிருள்?....



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

ராஜாமணி பிக்சர்ஸ்

பாச மலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

பின்னணி:

டி. எம். சௌந்தரராஜன், பி. பி. ஸ்ரீனிவாசன், எல். ஆர். ஈஸ்வரி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.